தனிச்சுற்றுக்கு மட்டும்

# காற்றுவெளி

சித்திரை - 2025

கலை இலக்கிய இதழ்



# காற்றுவெளி

**கலை இலக்கிய இதழ்**

சித்திரை - 2025

படைப்புக்கள் அனுப்ப :
Mullaiamuthan1954@hotmail.com
mahendran1954@hotmail.com

படைப்புகளின் கருத்துக்களுக்கு
படைப்பாளர்களே பொறுப்பு.

- ஆசிரியர் : சோபா
- வடிவமைப்பு : நெகிழன்
- நூல் அனுப்ப :
  R.Mahendran,
  34,Redriffe Road, Plaistow, Londan E13 0JX, Uk
- வருட சந்தா : 12.00 பவுண்ட்
- வங்கி இலக்கம் :
  R.Mahendran,
  A/C No : 90759821
  Sort.Code : 20-67-88,
  SWIFTBIC BUKBGB22
  IBAN GB80 BUKB 2067 8890 7598 21
  BARCLAYS BANK (PLAISTOW BRANCH)


வணக்கம்,

யாவரும் நலமா?

காற்றுவெளி சித்திரை மாதத்திற்குரிய இதழ் தங்கள் பார்வைக்கு வருகிறது.

வாழ்வியற் சூழலால் இதழிகளின் வருகை தாமதமாகவே உங்கள் பார்வைக்குக் கிடைக்கிறது.

இயலுமானவரை அனைத்துப் படைப்புகளையும் இணைத்துவிடவே முயல்கிறோம்.இணைய தொடர்புகளினால் கணினி தருகிற அசௌகரியங்கள் முடியாமல் போய்விடுகிறது.தனி மனித உழைப்பு ஆதலால் அது கூட தாமதத்திற்கு காரணமாகிவிடுகிறது.எதிர்காலத்தில் சரி செய்வோம்.

தொடர்ச்சியாக படைப்புகள் அனுப்பி உதவுவோர்க்கும்,வாசகர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றி.

இவ்வாண்டின் கனவுகள் நிறையவே உண்டு.எனினும் பதிப்பு,அச்சிடல்,தபால் செலவு என்பதையும் கருத்தில் கொள்ளவேண்டியிருக்கிறது.அண்மையில் நாம் வெளியிட்ட இங்கிலாந்து சிறப்பிதழால் ஏற்பட்ட அசௌகரியங்கள் இன்னும் சொல்லப்படாமலேயே இருக்கிறது.நிதானமாக சிந்தித்தே செயல்படவேண்டியுள்ளதால் தாமதமாகிவிடுகிறது.

கால மாற்றம்,பூகோள அரசியல் மாற்றங்கள் உலகின் பல அதிர்வுகளை ஏற்படுத்திவருவதை மறுக்கமுடியாது. இதற்குள்ளாகவே போராடும் இனக்குழுமங்கள் தங்களின் விடுதலையை முன்னெடுக்கவேண்டியுமுள்ளது.பல வடிவங்களில் அச்சுறுத்தும் நோய்களின் பயமும் நீங்கி சுபீட்சமான வாழ்வை எதிர்நோக்கிய மக்களுக்காக நாமும் பிரார்த்திப்போம்.

நட்புடன்,

சோபா

*01/04/2025*

# படைப்பாளர்கள்

### கவிதைகள்

1. க. புனிதன்
2. திருமதி.தா. சிலம்பரசி
3. அம்பலவன்புவனேந்திரன்(ஜெர்மனி)
4. நேசன் மகதி
5. ஆ.தமிழரசி
6. சி முத்தரசன்-அரியலூர்
7. நிவேதிகா பொன்னுச்சாமி
8. இரா.வெங்கடேஸ் குமார்
9. இளையவன் சிவா
10. DR ஜலீலா முஸம்மில்
11. ச. இராஜ்குமார்
12. சே கார்கவி கார்த்திக்

### சிறுகதைகள்

1. லி .நௌஷாத் கான்
2. கமலினிகதிர்-சுவிற்சர்லாந்து
3. ஜமீல்(இலங்கை)

### கட்டுரைகள்

1. அய்யனார் ஈடாடி
2. இரா.சீ .பாலகுமார்.M.A

**க. புனிதன்**

# பாவனை

ஒரு ஆரஞ்சு பழ சுளையை போல்
சிலந்தி வலையை
பிய்த்து பார்க்கிறது மழலை

குளிர்காலத்தில்
என் மேனியில் ஊற்றி கொள்ளும்
சுடு நீர் சின்ன தவளையையும்
நனைக்கிறது

மாலை பொழுது தோட்டத்தில்
நான் பறிக்கும் கனகாம்பரம்
பூக்கள் காம்பில் சூரியனின் சிகப்பு

சரிந்து கிடக்கும்
சீட்டுக் கட்டில் கோமாளியின்
சிவப்பு தொப்பி நிறத்தில்
கட்டில் கயிற்றில் நசுங்கி கிடக்கும்
மூட்டைப் பூச்சி

நன்னீர் பிரதேசத்தில்
கிடக்கும்
நிறைய நத்தைஉடலிகள் போல்
உன் கவிதை
வெறும் பாவனை
என சபிக்கிறார் குரு

❍

**திருமதி.தா. சிலம்பரசி**

மகிழ்வித்து மகிழுங்கள்...
மனதைக் கழுவுங்கள்...

சிரிப்பில் கொஞ்சி...
சீரென விளங்கி...

சந்தோஷங்கள் பரவட்டும்..
சங்கீதங்கள் மலரட்டும்...

துன்பங்கள் மறையட்டும்...
இன்பங்கள் பெருகட்டும்...

வன்மங்கள் தோற்கட்டும்-
நல் எண்ணங்கள் ஜெயிக்கட்டும்...

புன்னகைகள் பூக்கட்டும்...
நல் நட்புக்கள் வளரட்டும்...

அன்பை கொடுத்து...
பண்பை வளர்த்து...
மகிழ்வித்து மகிழ்ந்திடு..
மணி விழாவாய் வாழ்ந்திடு..

❍

கட்டுரை

# "சார் பேப்பர்" நாவல் விமர்சனம்

அய்யனார் ஈடாடி

**நா**ம் அன்றாடம் காணும் ஒரு காட்சியின் உள்ளுக்குள் உறைந்து கிடக்கும் வாழ்வியலின் பாடுகளை அதிலும் குறிப்பாக சொல்ல வேண்டும் என்றால் இளம் பருவத்து மாணவர்களின் உழைப்பினை முன்வைத்து இதுவரை யாருமே பதிவு செய்யாத பல்வேறு தகவல்களை அடர்த்தியாக தனது "சார்... பேப்பர்..." நாவலில் பதிவு செய்திருக்கிறார் எழுத்தாளர் அறிவுமணி.

தினந்தோறும் நமக்குக் கிடைக்கும் (செய்தித்தாள்) பேப்பருக்கு பின்னால் பலரது உழைப்புகள் இருக்கும் என்று நாம் அறியலாம். ஆனால் முகமறியாத இளம் பருவத்து மாணவர்கள் "சார்... பேப்பர்..."என்று வீட்டு வாசலில் தூக்கி எறிந்து விட்டுச் செல்லும் அவர்களது பின்னனி என்ன? எப்படிப் பட்டவர்கள்? அவர்கள் படிக்கிறார்களா, இல்லையா?அவர்களது குடும்பப் பின்புலம் இதெல்லாம் யாருக்கும் தெரியாது. பெரும்பாலும் பேப்பர் போடுபவர்களை பார்ப்பது அரிது. பொழுது விடிவதற்குள் பேப்பரை வாசகரிடம் கொண்டு போய்ச் சேர்ப்பதே முதல் கடமை. தாமதமாகச் சென்றால் செத்துப் போன பேப்பர் எதற்கு என்று கேள்வி கேட்பார்கள். சிலசமயம் நாளையிலிருந்து பேப்பர் போட வேண்டாம் என்று சொல்லிவிடுவார்கள்.




இந்த நாவல் முழுக்க வாடிப்பட்டியில் ஆரம்பித்து நிலக்கோட்டை வரை தகவமைத்துச் செல்கிறது.நிலக்கோட்டை, வத்தலக்குண்டு கிராமங்கள் எல்லாம் பழைய ஒருங்கிணைந்த மதுரை மாவட்டம் என்பதால் மதுரை வட்டாரச் சொல்லாடல்களோடு நாவலை முன் நகர்த்தியிருக்கிறார் நாவலாசிரியர் அறிவுமணி.

கதாநாயர்களாக வரும் சொக்கனும் செவப்பனும் தும்பு அவிழ்த்து விட்ட காளையைப்

போல பயணிக்கின்றனர். அந்த ஊரிலே யார் பேச்சையும் கேட்காமல் தத்தமது விருப்பத்திற்கேற்ற வேலைகளை செய்து வருகிறார்கள். ஆழ்ந்த தூக்கத்தில் இருக்கும் மூன்று மணிக்கு எழுந்து சைக்கிளை எடுத்துக்கொண்டு வாடிப்பட்டி பேருந்து நிலையத்திற்கு வந்து பேப்பரை வாங்கி தினமலர்,தினத்தந்தி, தினகரன்,இந்து ஆங்கிலம் என்று பிரித்துவிட்டு லயனுக்கு செல்கிறார்கள்.

பேப்பர் போடும் வேலை முடிந்து வந்த பிறகு விவசாய வேலைகளுக்குசா செல்கிறார்கள். விசேச வீடுகளில் சமையல்வேலைக்குச் சென்று சமையல்காரருக்கு உதவி வேலை செய்யும் சொக்கனுக்கு கிடைப்பதோ ஒரு டம்ளர் பாயாசம் தான். மொய் எழுதும் வேலையையும் சொக்கனிடமே கொடுக்கின்றனர்.கல்யாண வீடுகளில் சொக்கனை உருவக் கேலி கிண்டல் செய்வதும் நையாண்டி செய்வதும் தொடர்ந்து நடந்து கொண்டு இருப்பதை வேறு வழியின்றி தவிர்த்து விட்டு நகர்கிறான். இவையாவும் ஒரு வகையான ஒடுக்குமுறைக்குள் அமைந்திருக்கிறது.

இரண்டு சிறுவர்களும் பேப்பர் போடும் வேலையை விட்டுவிட்டு திடீரென்று சூலூருக்கு கிளம்புகிறார்கள். தங்களுக்கு வேலை வாங்கித் தருவதாகச் சொன்ன தங்கராசுக் கொத்தனார் ஏமாற்றியிருக்கு,எதாவது ஒரு கிடைத்தால் போதும் என்று அலைகிறார்கள். நல்ல சாப்பாட்டுடன் தொண்ணூறு ரூபாய் வேலை தருவதாக மேஸ்திரி அழைத்துச் சென்று வேலை கொடுக்கிறார்.

அவ்வகையில் சொக்கனும் செவப்பனும் சிறிது காலம் பணத்தின் தேவையையும் உழைப்பின் பலனையும் அறிந்திருக்கக் கூடியவையாக இருக்கின்றன.

செவப்பனின் உடல் நிலை ஒத்துழைக்காமையால் சூலூரிலிருந்து கிளம்பி வருதலும்.அவன் வந்த சில நாட்களிலே மேஸ்திரியிடம் கணக்கை முடித்து விட்டு சொக்கனும் சொந்த ஊர் திரும்பி பழைய குருடி கதவைத் திறடி என்பது போல மீண்டும் பேப்பர் போடும் வேலைக்குச் செல்கிறான்.

வாடிப்பட்டி பேருந்து நிலையத்தில் துவங்கி சாணாம்பட்டி பாண்டியராசபுரம் கல்லடிப்பட்டி கரட்டுப்பட்டி .. இப்படியே நீள்கிறது இவர்களது சுழற்சி வாழ்க்கை.

கவலையும் துயரமும் அழுகையும் அடக்கிக் கொண்ட சிறுவர்களின் வாழ்வியலை அப்பழுக்கற்று பேசியிருக்கின்றன. பெரும்பாண்மைச் சமூகத்திலும் பொதுச் சமூகத்திலும் பேப்பர் போடும் போது ஏற்படும் இன்னல்களையும் இடையூறுகளையும்

பொதுவுடைமைத் தோழர் சுமூகமாக தீர்த்து வைத்திருப்பதை விரிவாகக் காணமுடிகிறது.

கல்யாணம் காதணி விழா கிரகபிரவேசம் பூப்புனித நீராட்டு விழா ஏன் இறப்பு நிகழ்வுகளிலும் கலந்து கொள்ள முடியாத சூழ்நிலையை பொதுவெளியில் கேள்வியாக முன் வைத்திருக்கின்றன. சொந்த தாத்தா இறந்ததற்கு கூட பேப்பர் போட்டு விட்டு சடங்கு சம்பிரதாயங்களில் கலந்து கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தை கட்டமைத்திருக்கின்றன பேப்பர் போடும் வேலை. இவ்வேலையை விட்டு வேறு வேலைக்குச் செல்ல மனமில்லாமல் தவித்திருப்பதை எடுத்துரைக்கின்றன.

எல்லாவற்றிலும் மேலாக துயரத்தையெல்லாம் தாங்கிக் கொண்டு பேப்பர் போடும் சொக்கன் , மழைகாலங்களில் எப்படி சமாளித்திருப்பான் என்று நினைத்தால் வியப்பில் ஆழ்த்துகின்றன.

சாரல் மழைத்துளி லேசாக பட்டாலும் நனைந்து விடும் திறன் கொண்டவை பேப்பர்கள். இந்த பேப்பர்களை மழையில் நனையவிடால் சைக்கிளில் டக்கடித்துக்கொண்டு வாசகரின் கைகளில் தவழச் செய்யும் செயல் அவ்வளவு எளிதல்ல.மழையிலும் கூட சில வாசகர்கள் ஏன் இன்னய்யாரம் வார ?

சீக்கிரமா வந்து குடுக்க மாட்டாயா?

இப்படியிருந்தா பேப்பரை நீயே கொண்டு போ !

“நான் எதுக்கு காசு கொடுக்கனும்” என்று எள்ளி நகையாடும் அத்தகு கொடிய வாசகரையும் சமாளிக்கும் வல்லமை படைத்தவராகயிருக்கிறான் சொக்கன்.

கால்களில் அடிபட்டு புண்கள் வந்து நடக்க முடியாத நிலையிலும் சைக்கிளை அணைத்துக் கொண்டு பேப்பரை கேரியரில் வைத்துக் கொண்டு கும்மிருட்டில் தட்டுத் தடுமாறி பேப்பர் போடும் சொக்கன் தனது அனுபவத்தையும் சம்பாதித்த பணத்தையும் திரும்பிப் பார்ப்பதையும் “டீயும் பலகாரமும்” கண்களில் வந்து வந்து மின்மினியாய் மின்னுவதையும் காண முடிகிறது.

இத்தகைய பேப்பர் போடும் தொழிலின் கூறுகளைச் சுமந்து கொண்டே செல்கிறது “சார்… பேப்பர்…“ நாவல்


அவ்வகையில் “சார்… பேப்பர்…” நாவல் பேப்பர் ஏஜெண்டுகள் பெரும் முதலாளிகளாவதையும் பேப்பர் போடும் சிறுவர்கள் அல்லல்படுவதையும் விரிவாகப் புலப்படுத்தியிருக்கிறார் நாவலாசிரியர் அறிவுமணி.

எனது வாழ்த்துகளும் பாராட்டுகளும் எழுத்தாளர் அறிவுமணி அவர்களுக்கு. தொடர்ந்து இதைப் போன்ற பல நாவல்கள் வெளிவர வாழ்த்துகிறேன்.

❍

அம்பலவன்புவனேந்திரன்..(ஜெர்மனி).

# சூரியனோடு பேசுதல்



அந்தியில் விழுவதிலும் அதிகாலை எழுவதிலும்
விந்தையாய் ஏனின்னும் வெம்மை - புந்தியின்
அழகியவுன் வதனத்தை அவனிக்குக் காட்டவேனும்
பழசினைக் கழித்திடப் பார்..!

குந்தியின் மீதாயுனது கோபமின்னும் தனியாது
நிந்திப்பது உனக்கே நியாயமோ - சிந்தையில்
சாமியாய் உன்னையே சகமெல்லாம் துதிக்கையில்
பூமியைக் காத்தருள் புரி...!

கோடி ஆண்டுகளாய்க் குளிர்வித்துக் கோளாக்கி
சூடினாயே சுற்றுகின்ற சரமாய் - வாடிடாத
சூரியக் குடும்பத்தின் சூட்சுமத்தை அறிந்தநீயும்
வீரியத்தைச் சற்றே விலக்கு..!

செம்மையான புவிவாழ்வு சிறிதுசிறிதாய்க் கரைந்து
வெம்மையால் உயர்கிறதே வேதனை - உம்மால்
மடியுமுயிர் காத்திடவே மாற்றுவழி சமைத்திடுதற்கு
முடிவினை மாற்றிட முயல்..!

பாலையாய் மாறிவரும் பசும்புல் வெளிகளையும்
சோலைவனம் ஆக்கிடுவாய் சுடரே – வாலைத்
தலைமுறைகள் பல்லாண்டு தரணியில் தளைப்பதற்கு
நிலைமையை மாற்றிடு நீ..!

அந்தணர் வடிவிலே அரிநாராயணன் யாசித்திடச்
சிந்தும் குருதியைச் சேர்த்தீந்தவனின் - தந்தையே
தருமமாய் வெம்மையினைத் தடுத்திடவே ஓசோனை
கருமமாய் நெய்தலே காப்பு..

உந்தனின் கொடையினால் உலகமே உய்வதற்கு
குந்தகம் நிகழாது குறைத்திடுக - வெந்திடும்
கந்தகத்தால் புவனமே கருகிடாது வாழ்வதற்காய்ச்
சிந்தித்து மாறுதலைச் செய்..!

வெப்பமடையும் பூமியினால் வேகுகின்ற உயிர்களுடன்
அப்பிடும் நோய்நொடிகள் அகலவே – அப்பனே
சிந்தை இறங்கியே சினைத்தினைத் தணித்திடுதற்காய்
வந்தனம் செய்கிறோம் வணங்கி.

நேசன் மகதி

# பாலைவன மழை

தொலைதூரம் சென்றுவிட்ட
உன் அழைப்பு எனக்கு எப்போதாவது வரும்
சில கோள்கள் ஒரே நேர்க்கோட்டில்
சந்தித்துக்கொள்ளும் நிகழ்வாய்
சில நிமிடங்களில்
அது நடந்து முடியும்
இடைவெளிவிட்ட வார்த்தைகளில் நலம்
விசாரித்தலோடு முடித்துக்கொள்வாய்
சிறு துளியாயினும் பாலைவனத்திற்கு அது
மழைதானே....



❍

நிவேதிகா பொன்னுச்சாமி

# கொட்டுது வானம்

விதைத்த பயிர்
முளையிலே கருகிட
நட்டவன் உள்ளம்
நலிந்தே வாடுதே..

பருவம் பொய்த்த
மழையை நோகிறான்
பாவம் செய்த
உள்ளம் துடிக்கிறான்..

செழித்துக் கொழுத்த
மடியைக் கிழித்து
நவீன உரத்தால்
இயல்பைச் சிதைத்து

செயற்கை மோகத்தால்
இயற்கையை உதறி
மண்ணை அழித்த
மனிதனைச் சாடிட..

உள்ளம் மருகிய
உழவனுக்காகவே
பொத்துக் கொண்டு
கொட்டுது வானம்..

❍

ஆ.தமிழரசி

# கருவறை ஒன்றுதானே உனக்கும் எனக்கும்

சமூகம் சமம்தானே
உனக்கும் எனக்கும்

எதிர்பாலினமே
பிரபஞ்சத்தில் யாவர்க்கும்
மெகாபரிசு-இதில்

ஏகாதிபத்தியம் ஏளனம் எதற்கு பெண்ணிடம்..

துறவருமே
தூய்மையென்று
அரங்கேற்றம் செய்யலாமென்றால்

துறவிவேஷத்தில்
துயிலுரித்தலில் சாகசம்தான் செய்வதென்ன...

கருணைதொகைக்கு
கையூட்டு
கேட்கிறதே
கருவூலம்

கலங்கித்தான் போகிறது
காசில்லா நெஞ்சம்

வீதியில் இறங்கி விவசாயி வயித்துக்கு

வேண்டுமேசோறு என்றால்
எலிக்கறி இருக்குதுன்னு

ஏளனமே பதிலாய்
வருகுது இன்று

எப்போதுமாறும் இந்த இழிச்செயல் நாட்டிலே!!

மன்னனானால் விதிவெல்லும்
மதிவேண்டும் அல்லவா

மழலைலையில்லா யுகம்காண
விவசாயத்தில் விஞ்ஞானமெதற்கு?

விஷயம் சொன்னால் வாஞ்சைதான் எதற்கு

பணபேரத்தால் கருப்பைநிறையுது
கருவறையும் களவாடப்படுது

கடவுளைக் காணவே
கலங்கி வருபவளை

களவிக்கொள்ளும் பூசாரி
காசுபணம் கேட்டு

கடவுளைக் காட்ட கட்டப்பஞ்சாயத்து நடத்துது

ஆலயத்திலே ஆசிர்வதிப்பவரும்
.ஆண்டவன்அருகே இருந்துகொண்டு...

விளை நிலமெல்லாம் கருங்கல் முளைக்குது

நாற்றங்காலுக்கு வழியில்லாமல்
வாய்க்கரிசிக்கு
வழிதேடுது

அட்டூழியங்கள் எல்லாம்
அழியவே இல்லை


ஆலமரமாய் வளர்திங்கே
அரசியல் செய்யுது

கண்ணை கட்டி கைகளில் ஏந்தி

சாட்டையடி கொண்டார்போல்
சாய்ந்த தராசு தள்ளாடியே

விழியாலே சொன்னது
அப்புறமென்ன? சொல்ல.....

❍



சிறுகதை

# தேன் கூடு ...

லி .நௌஷாத் கான்

**ச**ண்முக முதலியார் ஜெயந்தனை பார்க்க அவன் இருக்கும் வீட்டிற்கு வந்திருந்தார் .அவரை கண்டதும் வாங்க ஐயா என வரவேற்றான்.

அவர் சுற்றும் முற்றும் பார்த்தார் அவன் பேச்சுலராக இருந்த போதும் வீட்டை சுத்த பத்தமாக வைத்திருந்தான் மற்ற வாலிபர்களை போல் அரை குறை ஆபாச நடிகைகளின் புகைப்படம் சுவற்றில் வைக்காமல் கடவுள் படத்தை மாட்டி வைத்திருந்தான்.

சுவற்றில் அவன் காலையில் சாமி படத்துக்கு மாட்டியிருந்த பூ சொல்லியது அவன் தினம் சாமி கும்மிடுவானென்று.

ஐயா டீ சாப்பிடுறீங்களா ,இல்லை காபி சாப்பிடீடுறீங்களா என்று கேட்டான்

அவர் நீண்ட மௌனத்திற்கு பிறகு அவன் கேட்காத கேள்விக்கு பதில் சொல்ல ஆரம்பித்தார்

நீங்க எங்க ஆளுங்க இல்லைன்னு தான் உங்களை வேணாம்ன்னு சொன்னேன்

என் பொண்ணு வீட்டை விட்டு வந்தும் கூட நீங்க உங்க அப்பா அம்மா சம்மதம் இல்லாம வேண்டாம்னு சொல்லிடீங்களாம் உங்களை மாதிரி ஒரு நல்ல பையனை கேவலம் சாதிக்காக வேண்டாம்னு சொல்லிட்டேனா என்னை போல ஒரு முட்டாளு யாருமே இருக்க முடியாது தம்பி

ஐயா நான் சின்ன வயசுல இருந்தே அப்பா -அம்மா இல்லாம அனாதையா ஆசிரமத்துல வளர்ந்தேன் ஏதோ என் படிப்பு மூலம் நல்ல வேலை கிடைச்சு ஒரு நல்ல

நிலைமைல இருக்குறேன் உங்க பொண்ணு என்கிட்டே காதலை சொன்னப்ப உங்க தேன்கூடு போல உள்ள குடும்ப உறவுகளுக்காக தான் உங்க பொண்ணு காதலை ஒத்துக்கிட்டேன், அவளை எங்க காதலுக்காக உங்க குடும்பத்துக்கிட்ட இருந்து பிரிச்சு என்னை போல அவளையும் ஒரு அனாதை போல வாழ வைக்க விரும்பலை ஐயா ,நம்ம குடும்பத்துல என்னை சேர்த்துக்கிட்டா மட்டும் தான் எங்கள் காதல் ஜெயிக்கும் ஐயா

ஐயான்னு சொல்லாதீங்க மாப்ள என்று அன்போடு ஜெயந்தனை அரவணைத்தார் சண்முக முதலியார்



சிறுகதை

# பூங்காற்று திரும்புமா?

கமலினிகதிர், சுவிற்சர்லாந்து

பகலவன் சோம்பல்பட்டு இன்னும் படுக்கையிலிருந்து எழுந்து வெளியே வரவில்லை. லண்டன் காலநிலை எப்போதும் இப்படித்தான். வானம் இருளைப் போர்த்தியிருந்தது.யாழ்ப்பாணத்திலென்றால் பகல வன் எட்டிப் பார்க்கிறானோ இல்லையோ கடமை தவறாத கர்மவீரன் நானென்று குரலெடுத்துக் கூவிடுவான் சேவல்.அபர்ணா திருமணத்தின் பின் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக கொழும்பில் வாழ்ந்ததால் அந்தச் சேவலின் குரலை தவறவிட்டதற்காய் மனம் வருந்துவாள். ஒருமுறை சுவிசில் அவள் உறவினர் வீட்டுக்குப் போயிருந்தபோது காலையில் சேவலின் கூவும் சத்தம் கேட்டு ஆனந்தப்பட்டு விசாரித்த தில் பக்கத்தில் பறவைகள் பராமரிக்கும் ஒரு இடமிருப்பதாகவும் அங்கு பலவிதமான பறவைகளுடன் சேவல்களும் இருப்பதாகவும் அவை கூட கோடை காலத்தில் மட்டுமே கூவும் என்று சொன்னார் கள். அங்கிருந்த ஒவ்வொரு நாளும் அபர்ணா சேவலின் கூவலை இரசித்து மகிழ்ந்தாள்.சேவலின் கூவல் தன்னை உற்சாகப்படுத்துவதாக ஒரு உணர்வு தோன்றுவதை அவளால் தடுக்க முடியாதிருந்தது.அந்தச் சேவலும் நேரம் காலமில்லாமல் தனக்கு தோன்றிய நேரத்திலெல்லாம் கூவி அபர்ணாவை மகிழ்வித்தது. அபர்ணாவின் மைத்துனி கூட 'அந்தச்சேவல் போன பிறவியில் உம்மடை வீட்டில் இருந்ததாக்கும். அல்லது உம்மடை சொந்தக்காரனோ அல்லது உம்மடை லவரோ என்னவோ? அது தான் உம்மை மகிழ்விக்க கூவுகிறது.இவ்வளவு நாளும் எங்களுக்கு இந்தக் கூவல் காதில் விழுந்ததாகவே தெரிய வில்லையே'

என்று கேலி செய்தாள்.அபர்ணா சோர்வுற்றிருக்கும் நேரங்களில் மகன் கூட கேலி செய்வான

'அம்மாவை சுவிசுக்கு அனுப்பி எடுத்தால் உற்சாகமாயிடுவா' என்று.அது உண்மை போலவே அபர்ணாவுக்குத் தோன்றும்.

கட்டிலில் படுக்கையில் இருக்கவே மனமாக இருந்தது அபர்ணாவுக்கு. 'எழும்பியும் என்னதான் செய்யப்போகிறேன்.முன்பெல்லாம் ஏழு மணிக் கெல்லாம் எழுந்து பிராணாயாமம்,யோகாசனம் செய்து அதன் பின்பே கோப்பி குடிப்பன்'

அப்போதெல்லாம் அபர்ணாவின் கணவர் கதிரவன் தானே கோப்பி போட்டுக் குடித்துவிட்டு ரி.வி பார்க்கத் தொடங்கி விடுவார். இப்போதெல்லாம் அபர்ணா எழும்பி வருமட்டும் காத்திருக்க வேண்டிய நிலமைக் குச் சென்றுவிட்டார்.அதுவும் குளிர்காலமென்றால் வயோதிபமும் எட்டிப் பார்க்க அபர்ணாவின் மனதுக்குள் இருக்கும் உற்சாகத்திற்கு உடல் ஒத்துழைப்பதில்லை.

'என்ன அவசரம்?இப்ப என்ன வேலைக்கா போகிறிங்க?ஆறுதலாக எழும்புங்கோ.முடிந்தநேரம் யோகா செய்கிறது. முடியாட்டா விடுங்கோ'

என்று பிள்ளைகள் பல தடவை சொன்னாலும் செய்யாவிட்டால் ஏதோ தவறு செய்வதுபோல் குற்றவுணர்வு ஏற்படுவதைத் தவிர்க்க முடியாமலிருக்கிறது. சின்னனிலிருந்து அப்பாட்டைப் பழகிய பழக்கம்.அவர் இறக்கும்வரை யோகா செய்வதை கைவிட்டதேயில்லை.சில நேரங்க ளில் எங்காவது வெளியில் போய்விட்டு வந்து களைத்துப் போயிருந் தால்'இன்றைக்கு விடுவம்'என்பார்.ஆனால் அடுத்த சில நிமிடங்களில் யோகாசனம் செய்யப் போய் விடுவார்.அவரால் செய்யாமலிருக்கவே முடியாது.அதுவும் அவர் பயணிப்பது எல்லாம் அவரது சைக்கிளில் தான். என்றுமே பேருந்தில் பயணித்ததாக ஞாபகமில்லை. அந்த சைக்கிள் அவரது பதிரோவது வயதில் அவரது மாமாவால் பிறந்த நாள் பரிசாகக் கொடுக்கப்பட்டது. பச்சைநிறக் கூடை முன்பக்கத்தில் அரசோச்ச குதிரையில் பயணிப்பது போல் கம்பீரமாக அவர் பயணிப் பது இன்னும் கண்ணுக்குள் நிழலாடியது.அதை அவர் தன் உயிர் போல தன் பிள்ளைகளில் முதல் பிள்ளை போலத்தான் நேசித்தார். யாரையுமே அதை ஓட்ட விட்டதில்லை.எங்களை மட்டும் அதில் உட்கார வைத்து அழைத்துச் செல்வார்.பெரியம்மா சொல்லுவா 'பெரியப்பா மனிதர்களை நேசிக்கிறதை விட பொருட்களைத்தான் நேசித்தார்.ஆனால் உங்கடை அப்பா பொருட்களுக்கு முக்கியம் குடுக்காமல் மனிதர்களை நேசித்தார். ஆனால் தன்ரை சைக்கிளை பொருளாய் பார்க்காமல் பிள்ளையாய் நேசித்தார்' என்று.

அது முழுக்க முழுக்க உண்மைதான்.தந்தையின் சைக்கிளில் பின்னால் உட்கார்ந்து சென்ற நினைவுகளை இடை நிறுத்தி படுக்கையை விட்டு எழுந்தாள் அபர்ணா.

கதிரவன் எழுபது வயதிலேயே டிமென்சியா என்ற மூளையில் ஏற்படும் அறிவாற்றல் செயல்பாட்டுக் குறைவினால் பாதிக்கப்பட்டபோது அபர் ணா மனமுடைந்துதான் போனாள். இப்போது மூன்று வருடமாகியும் இன்னும் அவளால் அதைப் புரிந்துகொள்ளத்தான் முடியவில்லை.எதை எங்கே வைப்பது என்பதில் தொடங்கி குளியலறையில் போய் உண வைத் தேடுவதும்,சமையலறையில் உடைகளைக்

கழற்றிப் போடுவதும் எல்லாமே அவருக்கு குழப்பந்தான். சிலநேரங்களில் நடு இரவில் வந்து ‘நித்திரை வரேலை. கொஞ்சநேரம் கதைச்சுக் கொண்டிருப்பமா’என்பார். இரவு,பகல் சிலநேரங்களில் தெரிவதில்லை.சொல்லாமல் சில நேரங் களில் வெளியே போய்விட்டு வீட்டுக்கு வரத் தெரியாமல் எங்கேயோ நிற்க அவரைத் தேடி எங்கெங்கோ அலைவதும் அபர்ணாவுக்கு மன உளைச்சலை சிலநேரங்களில் தந்துவிடுவதுண்டு.போன் கையில் வைத் திருந்தாலும் அதை எடுக்கத்தெரியாமல் நிற்பதைவிட அபர்ணா எடுத் தாலும்‘அது எடுபடாததற்கு நான் பொறுப்பில்லை’என்று சொல்லும் போது அபர்ணாக்கு கோபம் வரும்.ஆனால் கோபப்படுவதாலோ அவ ரை நொந்து கொள்வதாலோ எந்தப் பயனுமில்லை.மனதை சமாதானப் படுத்துவாள்.இரவு நடுச்சாமத்தில் குளிப்பதும்,காலையில் குளித்து விட்டுத் திரும்பக் குளிப்பதும் சாப்பிட்டுவிட்டு சாப்பிடேலை என்று சொல்வதும் வழக்கமாகி விட்டது.அடிக்கடி யாரோ மணியடிக்கிறாங்க என்று கதவைத் திறக்க முயற்சித்து பின் பயந்து கதவை அடித்து மூடுவதும் அபர்ணாக்கு எரிச்சலையூட்டும்.வேலைக்குப் போகிறேன் என்று சிலநேரங்களில் கிளம்புவதும் உண்டு.இவற்றால் அபர்ணாக்கு ஸ்ரெஸாக இருப்பது எல்லோருக்கும் கவலையளிக்கும். அவரது நோய் பற்றித் தெரிந்தாலும்;

‘எத்தனை தரம் தான் உங்களுக்கு சொல்லுகி றது. உங்களுக்கென்ன விசரா?’

என்று அபர்ணாவும் கத்தாமல் இருப்ப தில்லை.பிறகு யோசிப்பாள் ‘அவருக்குத்தான் ஒன்றுமே தெரியுதில்லை நான் கத்தி ஒரு பிரயோ சனமும் இல்லையே’மகன் சொல்லுவான்

‘என்னம்மா நீங்க.அவருக்கு இளமை திரும்பப் போகுதா என்ன? நீங்க தானே அடிக்கடி சொல்லுவீங்க. இளமையென்ற பூங்காற்று திரும்புமா? என்று.உங்களுக்கு முதலில் ரெயினிங் குடுக்க வேணும் போல இருக்கு. அவருக்கு மூளையின் நரம்பு செல்கள் பாதிக்கபட்டிருக்கு.இது மூளையின் பல தட்டுக்களிலும் பாதிப்பை ஏற்படுத்தலாம். முதலில் உங்கடை மூளைக்குச் சொல்லுங்கோ.மூளை மனதோடு சம்பந்தப்ப ட்டது. இதயத்துக்கும் மனதுக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை. இதயத் தில் உங்களிலை அன்பு இருக்கு.உங்களுக்கு கரைச்சல் குடுக்கக் கூடாது என்றதெல்லாம் இருக்கு.ஆனா மூளைக்கு அது விளங்குதி ல்லையே.’

அவளுக்குப் புரிந்தாலும் அவ்வப்போது பொறுமையிழந்து தான் விடுகி றாள்.இத்தனை வருடங்களும் மூளையில் திணித்து வைத்திருந்தது எல்லாம் என்ன கரைஞ்சா போயிட்டுது என்று அபர்ணா நினைப்பது ண்டு. மகள் சுதா சொல்வாள

;‘இலங்கையில் இருந்திருந்தால் இப்ப இவ்வளவு வசதியிருந்திருக்குமா? இந்த அரசாங்கம் எவ்வளவு வசதி செய்யுது.அதை நினைத்து மனதை தேற்றுங்கோ.’

இந்த நோய் மறதியை மட்டும் கொடுத்திரு;தால் பரவாயில்லை.பயமும், குழப்பமும் தான் பெரிய பிரச்சனையே.அதோடு பயம் தான் அவரை முழுமையாக ஆட்கொண்டிருந்தது.டாக்டர் சொன்னதுதான் உண்மை. அதைத்தான் மாற்றமுடியாதே.கடந்தகால பாதிப்புகள் இப்போது தாக்க மாக வெளிவருகிறதென்பது உண்மைதான். கொழும்பில் வேலை பார்த் தபோது எத்தனையோதரம் வேலை முடிந்து இரவுநேரங்களில் வரும் போது ஆமிக்காரர் மறிப்பதும் அவரது சிங்களப் பேச்சால் தமிழனெ ன்று அறியாத அவர்கள் அடையாள அட்டையில் பெயரைப் பார்த்து விசாரித்ததும் அந்தப் பயங்களெல்லாம் இப்போதும் அவரது மனத் தட்டுகளில் பதிந்திருப்பதும் நிதர்சனமான உண்மைகள்.இப்போதும் அடிக்கடி பயந்து ‘வாறான்கள் பிடிச்சுக் கொண்டு போய் விசாரிக்கப் போறாங்கள்’ என்று சொல்வதும் கதவைத் திறக்க வேண்டாமென்று அபர்ணாவைச் சொல்வதும் அடிக்கடி நடப்பவை தான்.83 கலவரத்தில் கொட்டியா(விடுதலைப்புலிகள்) வந்ததென்று பார்த்த தமிழரையெல்லாம் சுட்டுத் தள்ளியதும் அன்று தன் வேலைத்தலத்திற்கு சம்பளப் பணம் எடுப்பதற்காகச் சென்ற கதிரவனைப் பிடித்து சுடுவதற்காய் கழுத்தில் துப்பாக்கி வைத்ததும் அதிஷ்டவசமாக அந்தநேரத்தில் வந்த டி.எஸ்.பி காப்பாற்றிய நிகழ்வும் அவரது மனத்தடாகத்தில் அழிக்க முடியாமல் பசையாய் ஒட்டியிருப்பதும் புறந்தள்ள முடியாதவைதான்.

சனிக்கிழமையன்று மட்டும் அபர்ணா பரபரப்பாக சுழன்று வேலை செய்வாள்.மகள் சுதாவும்,மகன் சுதனும் குடும்பத்தோடு காலையில் வந்து இரவு உணவு முடிந்த பின்தான் போவார்கள்.அவர்கள் ஆளுக் கொரு கறி செய்து கொண்டு வந்துவிடுவார்கள்.அபர்ணா சோறு மட்டுமே போடுவாள். ஆனால் பேரப்பிள்ளைகளுக்காக ஏதாவது தின்பண்டங்கள் செய்யாமல் இருக்க மாட்டாள்.அன்று வீடு கலகலப் பாக உயிரோட்டத்துடன் துடித்துக் கொண்டிருக்கும். மகளுக்கு இரண்டு பெண் குழந்தைகளும் மகனுக்கு ஒரு ஆணும் பெண்ணுமாய் இரு குழந்தைகளும்.பேத்திகள் நிலா, முகிலினி,மகிழினி,பேரன் முகிலன் என நால்வருமாய் போடும் கொட்டந்தான் கதிரவனுக்கும்,அபர்ணாக்கும் ஊட்டச்சத்தாக இருக்கும்.தாத்தாவை வைத்து நாலு பேரப்பிள்ளைக ளும் எத்தனையோ குறும்புகள் செய்து எல்லோரையும் சிரிக்க வைப் பார்கள்.மகிழன் கேட்டான்

‘பூனை எலி பிடிக்கும் என்று தமிழ் புத்தகத்தில் இருக்கு.ஆனால் ஏன் அப்பம்மா லண்டன் பூனை எலியைக் கண்டால் பேசாமல் போகுது?’ கட்டியணைத்த அபர்ணா‘என்ரை செல்ல க்குட்டி எப்படி யோசிக்கிறான் பாருங்கோ’என்று சொல்லவும் முகிலினி சொன்னாள்.

‘தமிழ் புத்தகத்தில் போட்டிருந்தால் லண்டன் பூனைக்கு எப்படித் தெரியும்?’

அபர்ணாக்கு தன் பேரப்பிள்ளைகளின் அறிவில் அளவிட முடியாத பெருமை.‘இங்கு பூனைகளுக்கெல்லாம் தாத்தாவைப்போல் டிமென்சி யாவாக்கும்.எலியைச் சாப்பிட வேணுமென்றதை மறந் திட்டுதாக்கும்’

அபர்ணா சொல்லவும்‘அம்மா!பிழையாய் சொல்லிக் குடுக்காதேங்கோ’ என்று கூறியபடி

‘அப்படி இல்லை அப்பன்.முந்தி பூனைகள் தாங்களா கவே தங்களுக்கு சாப்பாடு தேடும்.தங்கடை சாப்பாடு எலிகள் தான் என்று அப்ப எலியைத் தேடிப் பிடித்துச் சாப்பிடும். இப்ப பூனைகளை வீட்டில் செல்லப்பிராணியாக வளர்த்து அதற்கான உணவை சுப்பர் மார்க்கட் டில் எல்லா வாங்கிக் குடுக்கிறம்.அப்ப அதற்கு எலியை பிடித்துச் சாப்பிடத் தோன்றாது.எலியின்ரை ருசியும் அதுக்குத் தெரியாது.’

தன் மடியிலிருத்திக் கூறினாள் அத்தை. ‘ஓ.அப்பிடியா?’ எல்லாக் குழந்தைகளுக்கும் உண்மை விளங்கியது.

‘அந்தப் பூனைகள் போலத் தான் இப்ப பிள்ளைகளும். ஒரு கிழமை யில் பெருக்கிற புரெய்லர் கோழிகளைச் சாப்பிட்டு எதுவுமே தெரியுதி ல்லை. எல்லாமே அம்மா அப்பா செய்து கொடுத்து,தாங்கள் சாப்பிட்ட கோப்பையைக் கூட கழுவத் தெரியாது.தாங்களாகவே பள்ளிக்கூடம் போகத் தெரியாது. நாங்கள் எல்லாம் முன்பு எங்கடை உடுப்புகளை நாங்களே தோய்ப்பம், அயர்ண் பண்ணுவம். இப்ப நீங்க இதெல்லாம் செய்கிறீங்களா?’

‘ஒவ்வொருத்தராய் எங்களை மெசினில் உடுப்பை போடச் சொல்றீங் களா.பிறகு சொல்லுவீங்க கரன்ட் காசு கனக்க வருகுது என்று’

நிலா சொன்னாள்.‘இதுகளுக்கெல்லாம் ஒரு பதில் ரெடிமேடாய் வைத்திருப்பீங்க’தாய் சொல்லவும்

‘எங்களுக்கெல்லாம் இப்பவே எவ்வளவு விடயங்கள் தெரியுது. நாங்க எவ்வளவு இன்ரெலிஜன்டாக இருக்கிறம்.’என்றனர் நிலாவும், முகிலினி யும். ‘தெரிவது வேறு. செயல்படுத்துவது வேறு.செயல் படுத்துவதே முக்கியம்’ சுதா சொல்லவும்,

‘விளங்கேலை.விளங்கப்படுத்துங்கோ அம்மா’ என்றாள் நிலா. ‘இன்ரெலிஜன்ரை விட இன்வோர்மேஷன் கெலக்ற் பண்ணுறதில் தான் கெட்டிக்காரராய் இருக்கிறீங்க.ஆனால் இம்பிளிமென்ரேஷன் தான் தேவை.அந்த ரலன்ரை வளர்த்துக் கொள்ளுங்கோ’

என்றாள் சுதா.மற்ற பிள்ளைகளை விட எங்கடை பிள்ளைகள் எவ்வளவு திறமானவர்கள் அக்கா.சும்மா அவர்களை மட்டந்தட்டா தீங்க. இன்வோர்மேர்ஷன்களை எப்பிடியெல்லாம் தங்களுக்கேற்ற மாதிரி இம்பிளிமென்ற் பண்றாங்க. எங்களைப்போல சப்பித் துப்பாமல் சுயமாக சிந்திக்கிறதை பாராட்ட வேண்டாமோ?வாழுமிட மொழியுடன், இவர்கள் தமிழையும் விடாமல் படிக்கிறதை நினைத்துப் பெருமைப்ப டலாமே அக்கா’

என்றாள் சுதனின் மனைவி சுருதிகா.‘அப்பிடிச் சொல்லுங்கோ மாமி’ என்று மாமியைக் கட்டியணைத்தார்கள் நிலாவும், முகிலினியும்.

‘நீங்க பிள்ளைகளைத் தாங்களே இயங்கவிடாமல் செய்திட்டு இப்ப பிள்ளைகளைக் குறை சொல்றீங்க. சின்னனிலை எல்லாத்தையும் செய்து குடுக்கிறது.கொஞ்சம் வளர்ந்தவுடன் செய்கிறேலையென்று குறை சொல்றது. உங்களுடைய வேலை கூடினவுடன் உங்களுக்குப் பிள்ளைகளுடன் நேரம் செலவழிக்க முடியுதில்லையென்ற ஆதங்கம். சும்மா பிள்ளைகளைக் குறை சொல்றீங்க. சுற்றியிருக்கிற உலகம் பொல்லாததென்று வெளியுலகத்துடன் கலக்க விடாமல் உங்கடை கைக்குள்ளேயே வைத்திருந்திட்டு திடீரென வெளியில் விட்டால் வித்தியாசமான சூழ்நிலைகளைச் சந்திக்கும்போது அதைக் கையாளத் தெரியாமல் பயந்துபோய்த்தான் இப்ப பிள்ளைகள் தற்கொலை என்ற ஒன்றுக்குள் புகுந்துவிடுகிறார்கள்.முந்தி எங்கை நாங்க உந்தத் தற்கொலைகளைத்தான் பார்த்தனாங்களோ அல்லது கேள்வி தான் பட்டனாங்களோ’என்றார் அபர்ணா.

பேச்சில் கலந்த சுதன் சொன்னான்

‘நீங்க சொல்றது சரியம்மா.யார் எப்பிடியிருப்பினமென்று இப்ப தெரியுதில்லை.நீங்க சின்னப்பிள்ளையாயிருந்தபோது சொந்தங்கள் மத்தியில் வாழ்ந்தீங்க.நாங்க சின்னனாக இருக்கேக்கையும் ஒரு பக்கம் போராட்டம் நடந்தாலும் எங்களை அது பாதிக்கேலை.சிங்கள முஸ்லீம் பிள்ளைகள் என்று எங்களைச் சுற்றியிருந்த ஆட்கள் இவ்வளவு மோச மாயிருக்கேலை.இப்ப பிள்ளைகளைத் தனிய வெளியில் விடவே பயமாயிருக்கு.ஒருத்தரையும் நம்ப வேண்டாம் என்று சொல்லவும் தயக்கமாய் இருக்கு. வெளியில் நிறைய பிரச்சனைகள் துரத்தும் என்று பயமுறுத்தவும் யோசனையாயிருக்கு. பிறகு அவர்கள் தன்னம்பிக்கை போயிடுமோ என்ற பயம்.அப்பிடிப்பட்ட காலகட்டமாயிருக்கே.பிள்ளை வளர்ப்பு என்பது இப்ப லேசுப்பட்டதில்லை. நீங்க வளர்ந்த,வளர்த்த காலமில்லை இது. இந்த இணையங்கள்,அதில் வரும் பயங்கர விடயங்கள் எல்லாமே பிள்ளைகளை நெருங்காமல் செய்ய முடியாது. அதற்குள்ளால் அவர்களைப் பாதுகாப்பது லேசான விடயமில்லைய ம்மா. எனக்கென்னும் அது வரேலை. அக்கா அந்த நெருக்கடிக்கைதான் இருக்கிறா. என்னதான் நாங்க சொல்லிச்சொல்லி வந்தாலும் பெற்றவர் களுக்கு இது சவால் தான்.’

‘எனக்கு விளங்காமலில்லை. நல்லதுகளைச் சொல்லிச் சொல்லிக் கொண்டே வந்தால் அவர்கள் புரிந்துகொள்வார்கள். இப்ப பிள்ளைகள் வலு புத்திசாலிகள். எங்கடை தமிழ்ப் பண்பாடுகளையும் சொல்லிக் கொண்டு வாங்கோ. தமிழையும் விடாமல் படிப்பிச்சிட்டீங்க என்றால் அதிலையிருக்கிற நல்லதுகளை எடுத்துக் கொள்வார்கள்’என்றார் அம்மா. ‘ஆக தமிழிலைதான் நல்லதுகள் இருக்கு என்று அம்மாவின் நினைப்பு’என்று அம்மாவை மெல்லச் சீண்டினாள் சுதா.

‘தமிழ்ப்பிள்ளைகளுடன் சேர்ந்து எங்கடை பழக்கவழக்கங்களைக் கைக்கொண்டு கடவுளையும் கும்பிட்டு வந்தால் காணும்.ஒரு கெட்ட தும் நடக்காது’என்று அம்மா சொல்ல

‘அக்கா!அம்மாக்கு விளங்கப்படுத்தேலாது.ஓமம்மா அப்பிடியே செய்கிறம்’ என்று பரிகசித்த சுதன்

‘தமிழ் படிக்கவேணும் என்றதில் எங்களுக்கு மாற்றுக் கருத்தில்லை. மொழிப் பற்று இருக்கவேணும். பிள்ளைகளுடன் பெற்றோர் தொடர்பாடும் மொழி தமிழாக இருக்க வேணும்.இப்ப பிள்ளைகளோடை இருந்து எங்கை பெற்றார் தங்கடை மொழியிலை கதைக்கினம்.இப்ப எங்கடை மொழி பற்றி அக்கறையில்லாமல் இங்கை பெற்றோர்கள் இருக்கிறார் கள். இப்பிடியே போனால் எங்கடை மொழி இங்கு காணாமல் போய் விடும் என்றதை நினைக்கிறார்கள் இல்லை.ஒரு பண்பாட்டின் ஆணி வேரே மொழிதான் என்றதை மறந்துவிடுகிறார்கள். தமிழர்கள் என்ற அடையாளத்தை நிலைநாட்ட எவ்வளவு பாடுபட வேண்டியிருக்கு. புல்லாங்குழல், சங்கீதம்,பரதநாட்டியம,;வீணை,என்ற கலைகளுக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தில் அரைவாசியென்றாலும் தமிழ் படிக்க குடுக்கலாமில்லையா? இப்பிடியே போனால் நாங்கள் தமிழர் என்ற அடையாளமே இல்லாமல் முகமிழந்தவர்களாகி விடுவோமே.மண்ணும் மொழியுந்தானே மனிதனுக்கு முகவரி தருகிறது. அதைப் பெற்றோர் யோசிக்கிறார்களில்லையே’.

‘ஓமடா சுதன்.நான் அ.முத்துலிங்கத்தின் ஒரு கதை வாசிச்சனான். யேசு பேசிய அராமிக் மொழி இப்ப பேசுவோரில்லையென்று அராமிக் மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட ஒருவர் கனடாவில் தனித்து வாழ்ந்ததாகவும் அவர் மனைவியுடன் மட்டுமே அராமிக் பேசி வந்த தாகவும் மனைவி இறந்தபின் ஒவ்வொரு நாளும் வேலை முடிந்து வந்த பின் சுவர்களில் அந்த எழுத்துக்களை எழுதி சுவர்களோடு பேசி வந்ததாக எழுதியுள்ளார்.தங்களுக்கு நாடு இல்லாததால் தங்கள் மொழி பற்றிய கவலையில் தம்மொழியை அழிய விடக்கூடாது என்பத ற்காக தான் மட்டுமென்றாலும் சுவரோடு பேசி வருவதாகக் கூறியதாக ஆசிரியர் எழுதியுள்ளார்.அதே நிலைமை எங்கள் மொழிக்கு வந்துவிட க்கூடாது.எங்களுக்கென்று ஒரு நாடுதானில்லை. மொழியை என்றாலும் நாங்கள் காப்பாற்ற வேண்டாமோ?’ என்றார் கவலையுடன் அபர்ணா.

‘எங்கள் மூதாதையர் எம்மிடம் ஒப்படைத்த மொழியை,பண்பாட்டை றிலே விளையாட்டுப் போல நாங்க உங்களிட்டைக் குடுக்க நீங்க அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்ல வேண்டும்.நீங்க உங்கள் பிள்ளைகளுக்கு தமிழைச் சொல்லிக் கொடுப்பீங்கதானே’என்று தன் பிள்ளைகளைக் கேட்டான் சுதன்.அதோடு தொடர்ந்தான்.

‘நான் ஒரு முறை சுவிஸ் போயிருந்தபோது ஒருவரைச் சந்திச்சன். அவர் சொல்றார் எத்தனையோ வருடத்திற்குப் பிறகு இப்பதான் தான் என்னுடன் தமிழ் கதைக்கிறதென்று. தன் பிள்ளைகளுக்கு தமிழ் தெரியாதாம்.இவ்வளவு நாளும் தனக்கு இது பெரிசாகத் தெரியேலை யாம்.தான் வாழ்வதும் பெலிசோனா கன்ரோனாம்.அங்கு தமிழரும் குறைவாம். தாங்களும் தமிழருடன் தொடர்பைத் தேடாமல் இருந்திட்டி னமாம்.இப்ப தனக்கு அறுபது வயதாயிட்டுதாம்.இப்ப தனக்கு தமிழ் பேசவும் கேட்கவும் ஆசையாக இருக்காம். மனைவியும் தமிழ் பேசுறதை விட்டிட்டாவாம். தான் விட்ட பிழை இப்பதான் விளங்குதாம். பிள்ளை களுடன் பேசாவிட்டாலும் நாலு தமிழரையென்றாலும் சேர்த்து வைக்கா ததையிட்டு தான் இப்போது கவலைப்படுவதாகவும் சொன்னார்.இப்ப தான் தமிழ் நூல்களைத் தேடித் திரிகிறாராம். ஒரு எழுத்தாளரிடம் கொஞ்சம் நூல்கள் வாங்கி வாசிக்கத் தொடங்கியிருக்கிறாராம். எனக்கெண்டா தமிழ் பேசாட்டால் தண்ணி விடாய்க்கிற போலை இருக்கும்.’

சுதா சொன்னாள்‘சரியான முட்டாளாயிருக்கிறானே. தனக்கு தேவையா னதை தேடத் தெரியாதா?காசுக்குப் பின்னாலை ஓடிற்று இப்ப வயது போகிற காலத்திலை இதுகளை யோசித்து கவலைப்பட்டு என்ன பிரயோசனம்? சில பேர் தங்கடை பிள்ளைகள் சுவிஸ்காரரோடைதான் பழக வேணும். தமிழ் தெரியவேணும் என்றில்லை என்று இருந்திட்டு காலங்கடந்து கவலைப்படுகிறார்கள்.ஏன் தமிழ்நாட்டிலேயே தமிழ் பேசினமில்லை. மம்மியும்,டடியும். என்னுடைய நண்பி சென்னைக்குப் போயிட்டு வந்து சொன்னா.பள்ளிக்கூடம் போகேலையா என்று கேட்க அப்பிடியென்றால் என்ன என்று கேட்கினமாம்.ஸ்கூல் என்று சொன்ன வுடன் அப்படித் தமிழில் சொல்லுங்கோ என்கினமாம்.அந்தளவில் தமிழ் அங்கையிருக்கு’

சிரிப்பும் சந்தோஷமும் ஆட்சி செய்த அந்த வீடு பகல் முடிந்ததும் அமைதியாக விடைபெற இரவு ஆட்சியைத் தன் கையில் எடுத்துக் கொண்டது.இனி அடுத்த சனிக்கிழமை வரை அந்த வீடு வெறும் கல்லும் மண்ணும் சேர்த்துக் கட்டிய ஒரு கட்டிடமாகவே உயிர்ப்பின்றி இருக்கும்.கதைத்த கதைகளை மீட்டுப் பார்ப்பது மட்டுமே அபர்ணாவின் பொழுதைப் போக்க உதவுவதாக இருக்கும்.கணவனுடன் எதையும் பகிர முடிவதில்லை.அவருக்கு எதுவும் ஞாபகம்

இல்லாததைத் தவிர கதைப்பதில் எதுவித அக்கறையும் இல்லையென்பதே அபர்ணாக்கு குறையாக இருந்தது. சொல்லும் கதைகளைக் காதில் வாங்கிக்கொள் வதாகத் தெரியவில்லை.எந்தவித பதிலும் கூறாமலிருப்பது அபர்ணா க்கு பெருத்த ஏமாற்றத்தையே கொடுக்கும். ரீவி பார்ப்பதொன்றே அவரது பிடித்தமான பொழுது போக்காயிருப்பது சிலநேரங்களில் எரிச்லையூட்டும்.அவருக்கு சங்கீதத்தில் இருக்கும் ஆர்வத்தால் இசை நிகழ்ச்சிகள்,வயலின் ,ஸ்போர்ட்,கிரிக்கெட் என்று பார்த்தபடியிருப்பார். எப்போதுமே அவர்கள் இருவருக்கும் இரசனை ஒன்றாயிருந்ததில்லை. அப்போது பாதிக்காத விடயம் வயது போன நேரத்தில் கொஞ்சம் நெருடலாகவே இருந்தது. தற்போதைய கிரிக்கெட் வீரர்கள் அவரது ஞாபகத்தில் இல்லை.மகன் பழைய கிரிக்கெட் நிகழ்வுகளை போட்டு விட்டதால் அவற்றை பார்த்து இரசிப்பார். சச்சின் ரெண்டுல்கர்,விராட் கோளி,ரோஹித் சர்மா இவர்களை இனம் காண்பதில் அவருக்கு ஒரு குழப்பமும் இருப்பதில்லை.'அவர் கதைக்காட்டி என்ன நீங்க கதைச்சு கொண்டிருங்கோ' என்று பிள்ளைகள் சொல்லவும் 'நான் என்ன ரீவி யிலை நியூஸ் வாசிக்கிற ஆளே. சும்மா ஆளில்லாத கடையிலை ரீ ஆத்தச் சொல்றீங்க' என்று அபர்ணா பதில் சொல்வார்.

'அம்மா!இப்ப ஞாபகம் வருகுது.ரீ ஆத்துறது,பஞ்சி யாயிருக்கு,பின்னை, பேந்து,குந்தியிருக்கிறது,முஸ்பாத்தி ,பகிடி விடுறது இந்த வார்த்தைகளெ ல்லாம் எங்கடை பிள்ளைகளுக்கு தெரியாது.கனக்க யாழ்ப்பாணத்தமிழ் மறைஞ்சு கொண்டு வருகுது.நான் பேந்து வாறனென்றால் பேந்தப்பேந்த முழிக்கிறாய் என்றுதானே சீரியல்களில் பேசுவினம்.இதென்ன புதுக் கருத்து சொல்றீங்க என்கிறார்கள் பிள்ளைகள்' என்றாள் சுதா.

'இந்தியத் தமிழ் தானே பிள்ளைகள் ரீவியிலை கேட்கினம்.அப்ப அது கள் தானே அவையின் வாயிலை வரும்.ரொம்ப என்று பிள்ளைகள் அடிக்கடி சொல்றதை நான் கவனிக்கிறன்.ஆனாலும் எங்கடை பிள்ளை கள் பரவாயில்லை.அன்றைக்கு பிறைமாட்டிலை நீங்க உடுப்புபார்க்கும் போது நான் எங்கையென்றாலும் உட்கார்ந்து இருக்கிறன் என்று இருக்க முகிலினி என்ன சொன்னா தெரியுமே.இதிலை அடக்க ஒடுக்கமாயிருங்கோ. ஒடித் திரிகிறேலை என்று.' 'ஓ! உங்களுக்கு அப்பிடிச் சொல்லீற்று எனக்கு வந்து சொன்னா.அம்மம்மா ஆடி அடங்கீற்றா என்று' சுதா சொல்லவும் எல்லோரும் சிரிசிரி என்று சிரிக்கவும் கதிரவனும்

'என்ரை குழந்தைகள் எப்பிடிக் கதைக்குதுகள். அவையளைக் குறைசொல்றீங்க' என்றார்.'தாத்தாவையே சிரிக்கவைச்ச கெட்டிக்காரியெல்லோ எங்கடை முகிலினி' என்று எல்லோரும் பாராட்டினார்கள்.அம்மா சொன்னா

'சுதா காலைத் தூக்கிக் கொண்டு இருக்கவேண்டாம் என்று அடக்க ஒடுக்கமாயிருங்கோ என்று சொல்றதை என்ரை குஞ்சு சரியான இடத் திலை சொல்லீற்றாளே. தாய் சொல்றதுகள் அவையும் சொல்லினம். சுருதி நீரும் சொல்லிக்கொண்டு வாரும்.ஏனிப்ப இலங்கையிலும் இந்தியத்தமிழ் கலக்கத் தொடங்கிவிட்டுதாம்.ரொம்ப,தூங்கப் போறம், அசடு வழியுது, கலாய்க்கிறது,மச்சி என்றெல்லாம் சொல்லினமென்று என்னுடைய தோழி சிறீ இப்ப போயிட்டு வந்து சொன்னா.ஒண்டும் செய்ய ஏலாது. நீங்க நீங்க உங்கடை பிள்ளைகளைக் கவனித்து திருத்திக் கொள்ளுங்கோ' என்றார் அம்மா.சுதன் சொன்னான் 'சேதுபதியை செத்து பாதி என்று வாசிக்கிறான் மகிழன்' என்று கூறவும் சுதா சொன்னாள் 'அது தான் பரவாயில்லை.முகிலினியின் ப்ரண்டின் அப்பா தளையசிங்கம். அதை இவை தலை அசிங்கம் என்று வாசிக்கினம்' 'பிள்ளையள் வாசிக்கிறதிலை என்ன பிழை?என்ரை குழந்தைகள் சொல்றதுகளை நான் நினைச்சு நினைச்சு சிரிப்பன்.' என்று அம்மா சொன்னா.

தகப்பனைப்பற்றி அபர்ணா குறைகள் சொல்லத் தொடங்கினால் 'என்னம்மா கோபிப்பது,முரண்டு பிடிப்பது,கத்துவது என்று எதுவுமில் லாமலிருப்பதே பெரிய விடயம்.அடிக்கிறது,பிடித்து தள்ளுறதென்று எத்தனை பேர் மோசமாக நடப்பினம்.அப்பா சொல்லுக்கேட்ட பிள்ளை யாய் அப்பாவியாய்தானே இருக்கிறார். எங்களைச் சின்னனிலை வளர்த் தது போல் அப்பாவை வளர்க்கிறனென்று நினையுங்கோ?'

என்று பிள்ளைகள் கூறவும்.'நானென்ன உங்களை வளர்த்த வயசி லையா இப்ப இருக்கிறன்' ஆற்றாமையுடன் கூறுவார் அபர்ணா. ஆரம்ப த்தில் வெளியே போய்விட்டு வரத் தெரியாமல் ஒரிரு தடவை தடுமாறி யதில் அபர்ணா அவரை நன்றாகவே பயமுறுத்தி விட்டார்.

'இப்படி இனி வெளியே போனீங்களென்றால் ஹோம்மில் சேர்த்து விட்டிடுவன்' அதற்குப் பயந்து இப்போதெல்லாம் வெளியில் போவ தில்லை.அவருக்கு ஏன் டெமென்சியா நோய் வந்ததென்று அபர்ணா அடிக்கடி கேட்டுக் கொள்வாள். அவர் ஒருமுறை வெளியில் போன போது வீதியில் விழுந்ததினால் முதுகெலும்பில் ஒரு சத்திரசிகிச்சை செய்ய நேரிட்டபோதே அவருக்கு இந்த டெமென்சியா நோய் தாக்கி யிருக்கலாம் என்று தன்னைத் தேற்றிக் கொள்வாள் அபர்ணா. 'மூளைக்குப் போகிற ஒரு நரம்பு தொடர் பற்றுப் போய்விட்டது.ஏன் எப்படியென்று ஆராய ஏலாது. டிசேபிலிற்றி,டிசீஸ்,டெத் இந்த மூன்று 'டி' யும் எப்பவும் வரலாம்.சிலநேரம் நடக்க முடியாமல் போயிருக்க லாம். எங்கள் நல்லநேரம் இவ்வளவோடு முடிந்தது' அதை நினைத்து ஆறுதல் பட்டுக் கொள்ளுங்கோ' என்பான் சுதன்.

அடுத்த சனிக்கிழமை இறக்கை கட்டிக்கொண்டு விரைவில் வந்து விட்டது.சமர் காலமாகையால் எல்லோரையும் சுறுசுறுப்பு தொற்றிக் கொண்டது.பிள்ளைகள் வந்தவுடனேயே தனக்கு நித்திரை வருகுதி ல்லை என்று கதிரவன் சொல்லத் தொடங்கினார்.

‘அதைப்பற்றிக் கவலைப்பட்டால் இன்னும் நித்திரை வராது.பழைய பாட்டுக்களைப் போட்டுக் கேட்டுக் கொண்டு படுங்கோ.இப்ப சமர் தானே.அம்மாவோடு கொஞ்சம் கதைச்சுக்கொண்டு நடந்திட்டு வந்து படுங்கோ. உங்கடை பழைய காதல் கதைகளைத் திரும்ப ரீவைன் பண்ணிக் கதையுங்கோ’ என்று மகள் சுதா சொல்லவும் நிலா சொன் னாள்.

‘உங்கடை ரொமான்சை கென்டினியூ பண்றதுதானே. அதுதான் பாடுவீங்க ஒரு பாட்டு நான் மலரோடு தனியாக ஏனிங்கு நின்றேன் என்று.இப்ப பாடுறதுதானே’

என்று நடித்துக் காட்டினாள்.அவளது அபிநயத்தைப் பார்த்து எல்லோரு மே மகிழ்ந்தார்கள்.சிரிப்பும் பேச்சுமாக கலகலப்புடன் மதிய உணவு உண்டபின் எல்லோரும் அரட்டையடிக்க உட்கார்ந்தார்கள்.கடைசியாக டொக்ரரிடம் போனபோது கதிரவனுக்கு பார்க்கின்சன் நோயும் ஆரம்பித் திருப்பதாகச் சொன்னதைப் பிள்ளைகளிடம் பகிர்ந்து கொண்டாள்.முது மையில் கட்டாயம் செயலாற்ற வேண்டியது கால்கள்தானே.அதுவும் கஷ்டமென்றால்?கலக்கத்துடன் சொன்ன தாய்க்கு சுதா சொன்னாள். ‘எல்லாமே முக்கியம் தானம்மா.கண் தெரியாட்டாலோ,கை ஏலாமல் போனாலோ கஷ்டம்தான்.நடக்க முடியாட்டால் வோர்க்கர் ஒன்றை வாங்குவம்.அதின்ரை உதவியோடை நடக்கட்டும். நீங்க சும்மா கெதி யாய் நடவுங்கோ என்று சொல்லிக் கொண்டிருக்காதேங்கோ’என்று சொல்லிவிட்டு வாங்கோ புத்தியை வேறெங்கையென்றாலும் திருப்புவம்’ என்றதுடன் விவாதமொன்றைத் தொடக்கி வைத்தாள். ‘மகரந்தச் சேர்க்கை போல் பருவத்தின் சுழற்சியில் இனப் பெருக்கம் செய்யும் போது எங்கிருந்து வருகிறது தாய்மை. தாய்மை என்ற உணர்வை ஏன் கர்ப்பப்பையுடன் தொடர்பு படுத்துகிறோம். குழந்தை பெறாத பெண்ணுக்கும் குழந்தைகளைப் பாசமாய் வளர்க்கும் ஆணுக்குக்கூட தாய்மையுணர்வு இருக்கே. தமிழர் மட்டும் இப்படி தொடர்புபடுத்துகி றோமா அல்லது மற்ற இனத்தவரும் அப்படியா?’சுருதிகா சொன்னாள் ‘இதற்கு பதில் எங்களால் சொல்ல முடியாதப்பா.உங்கடை தம்பியா லை மட்டும்தான் முடியும்’.

‘யார் சொன்னது தாய்மையென்றால் கருவில் ஒரு குழந்தையைத் தாங்குதல் என்று.தாய்மையென்பது பெண்ணுக்கே உரித்தானதில்லை. இன்னொரு உயிரைத் தன்னுள் விருப்பத்துடன் இணைத்துக்கொள்ளும் குணந்தான் தாய்மை.தாய்மையென்பது ஒரு தகுதியில்லை.அதுஉணர்வு சம்பந்தப்பட்டதே தவிர பால் சம்பந்தப்பட்டதில்லை. லொஸ் ஏஞ்சல்ஸ் அமெரிக்காவில் பென்னட் காஸ்பர் என்ற திருநங்கை ஒருவர் 2020ல் குழந்தை பெற்ற நிலையில் தாய்மை,பெண்மை என்று எப்படி வரையறு க்கலாம்?அதெல்லாத்தையும் விட்டு உலகம் விலகி எவ்வளவோ கால மாகிவிட்டது.அதோடை கர்ப்பம் அடைந்தால் மட்டுமே தாய்மை என்பது பொய்யான ஒன்று’சுதன் கூறி முடிக்கவும் சுருதிகா கேட்டாள் ‘தாயின் அன்பிற்கு தாய்மை என்பது போல் தந்தையின் அன்பிற்கு ஏதும் பெயர் இருக்கா என்ன?’ ‘மதர் ஹ_ட்,ஃபாதர் ஹ_ட் என்பார்களே.அதெ ன்ன?’ சுதன் சொன்னான்‘ஓ.அதுவா?நான் நினைக்கிறன் தாய்மை என் பது பெண்பால் சொல் இல்லையென்று. பால்களைக் கடந்தது தாய்மை. வட இந்தியாவில் யானைக் கன்று ஒன்றை ஒரு தொடருந்து அடித்துக் கொன்றபோது பெரிய யானைக்கூட்டமே அந்த இடத்திற்கு வந்து ஆர்ப் பாட்டம் செய்ததாம்.அது கூட தாய்மை உணர்வால்தானே. மிருகங்கள் கூட ஆண்பெண் பேதமின்றி தாய்மையுணர்வால் தானே அப்படிப் போராடியிருக்கின்றன’.‘ஏன் ஆணின் பெண்தன்மையை தாயுமானவர் என்ற சொல் றிபிறசென் பண்ணுமில்லையா?’என்றாள் சுதா.‘ஓமோம். சிவபெருமானை தாயுமானவர் என்று சொல்றதுதானே. அதுவும் சரியாய்த்தானிருக்கும்’என்றார் அபர்ணா.

சுதன் அவர்கள் உறவினர் ஒருவரின் மகனுக்கு வேலை எடுத்துக் கொடுத்ததால் அவனுக்கு நன்றி கூறும் நோக்குடன் அவர் வீட்டுக்கு வந்திருந்தார்.வந்த இடத்தில் சுதனை சிலாகித்துக் கூறிய அந்த உறவினர் சுதனின் கையைப் பிடித்து‘எப்படி உமக்கு நன்றி சொல்ற தென்றே தெரியவில்லை’என்று கூறவும்‘அங்கிள்!அதற்கு வேறை வாயா வாங்கிக் கொண்டு வரப்போறீங்க.அல்லது நன்றி சொல்ல தனியாய் ஏதும் படிப்பு படிச்சிட்டு வரப் போறீங்களா?சும்மா சொல்லீற்றுப் போயி ட்டே இருங்கோ அங்கிள்’என்று கிண்டலடித்தான்.‘இந்தப் பேச்சுத்தான் என்ரை மகனிட்டை எனக்கு பிடித்தது’என்று கதிரவன் கூறவும்‘இது தான் சுதனின் ஸ்பெஷல்.இப்படிச் சொல்லாட்டி அவன் சுதனில்லையே’ என்றார் அபர்ணா பெருமையுடன்.‘நீங்க இப்பிடிச் சொல்லிச்சொல்லியே அவன் யாருக்கும் பயப்படுறதில்லை.இப்பிடித்தான் போனமுறை இலங்கை போனபோது ‘பெரியப்பா என்னடா இப்பிடி தலை வழுக்கை யாயிட்டுது என்று கேட்க அதாலை உங்களுக்கேதும் பிரச்சனையா? என்கிறான்’என்றாள் சுதா.

விளையாடிக் களைத்த குழந்தைகள் வீட்டுக்குள் அடங்கினார்கள். வானிலிருந்து பூமிக்கு நட்சத்திரங்களை அனுப்ப முடியாமல் திணறிய பிரபஞ்சம் பிரகாசமாக ஒளிரும் செயற்கை விளக்குகளுக்கு வழிவிட்டு ஒதுங்கி நின்றது.இந்தப் பிரபஞ்சத்தின் சக்திகளை காணாமல் போக்கி விட்டு அறிவியல் பெருமிதத்துடன் ஒளிர்கிறது. குழந்தை மகிழினிக்கு என்ன தோன்றியதோ குதூகலத்துடன் மழலைக்குரலில் பாடத் தொட ங்கினாள்.‘நிலா நிலா ஓடிவா.நில்லாமல் ஓடிவா’எல்லோருக்கும் அவள் குதூகலம் தொற்றிக் கொள்ள மகிழ்ச்சியுடன் அவள் செல்லக் குரலு க்கு அடிமையானார்கள்.கொஞ்சம் கொஞ்சமாய் முகிலுக்குள் மறையப் போன நிலா அந்தக் குட்டிக் குழந்தையின் பிஞ்சுக்குரலின் இனிமை யில் மயங்கி வெளியே எட்டிப் பார்த்து சிரித்தது.

❍

சி முத்தரசன், அரியலூர்

# தீவிரவாதம்

உடல் வலிகளை மட்டுமல்ல /
மனதின் வலிகளையும் கடத்துமாமே /
நரம்பு மண்டலம்! /
அது செயல் இழந்தது எப்பொழுது /
என்று நினைவில்லை /

துப்பாக்கிக் குண்டுகளும் ஏவுகணைகளும் /
எங்கள் வலிகளையும் /
அழும் குரல்களையும் /
தின்றுச் செரித்துவிட்டன /

என் கண்கள் என்ன தேடுகிறது ?/
இழந்தவர்களைப் பற்றியா....? /
இழந்தவைப் பற்றியா..../
என்னிடம் இழப்பதற்கு /
இன்னும் உறுப்புகள் இருக்கின்றனவே /
என்பதைப் பற்றியா தெரியவில்லை !/

இன்று எந்த சொந்தமுமில்லை /
இந்த மண்ணும் சொந்தமில்லை/
இங்கு மனிதர்களுக்கே/ இரக்கமில்லாத போது /
ஏவுகணைகள் என்ன செய்யும்?!

பள்ளிக்கூடங்கள் தரைமட்டமாயின /
பதுங்குக் குழிகள் நிறைந்தே போயின /

இம்மண்ணில் தான் இருக்கிறோம் /
வரி கட்டு என்றார்கள் /
இம்மண்ணில் எதற்கு இருக்கிறாய் - என்று /
வரிந்து கட்டி வருகிறார்கள் /

சிங்கத்தின் கோரைப் பற்களில் /
இன்னுமும் ரத்த வாடை வீசுகிறது /


ஒரு இனத்தையே கொன்று புதைத்து/
பசியாறிக் கொண்டிருக்கிறார்கள் /
அதிகார போதையின் அரசியல்வாதிகள்!/

அவர்களிடத்திலேயே கைகுலுகுகிறது/
அண்டை நாடுகளின்
அன்புக் கரங்கள் /

செல்லரித்துப்போன - என்
புத்தகப்பையில் /
எஞ்சிய என் எழுத்துக்களை -நீங்கள் /
படித்துக் கொண்டிருக்கும் பொழுது /
ஏவுகணைக்குள் நான் /
புதைந்து விட்டிருப்பேன்

நாங்கள் விதைக்கப்பட்டமோ /
புதைக்கப்பட்டமோ /
தெரியவில்லை /
நாளை விடிந்தால் - எங்கள்/
நாடி நரம்புகள் தான் /
உங்கள் தேசத்தின் /
எல்லைக் கோடுகள் /
என்பதை மறவாதீர்கள்!

❍



தகவல் குறிப்பு

# இந்து சமயத்தினரின் 16 சடங்குகள்

**கவிக்கோ .இரா.சீ .பாலகுமார்.M.A .**

இந்து சமயத்தினர் பிறப்பு முதல் இறப்பு வரை செய்ய வேண்டிய 16 சடங்குகள் குறித்து கல்ப சூத்திரங்கள் மற்றும் தர்ம சாத்திரங்களில் குறித்துள்ளது. இந்த சடங்குகளில் பல புரோகிதரைக் கொண்டு செய்ய வேண்டும். சடங்குகளின் விவரம் பின்வருமாறு[1][2]:

- கர்ப்பதானம் - முதலிரவு அல்லது சாந்தி முகூர்த்தம்
- பும்சவனம் - கர்ப்பவதிக்கு 3 அல்லது 4ம் மாதத்தில் செய்ய வேண்டியது.
- சீமந்தம் - கர்ப்பவதிக்கு 5 அல்லது 7ம் மாதத்தில் செய்ய வேண்டியது.
- ஜாதகர்மா - பிறந்த குழந்தையின் தொப்புள் கொடி நீக்கும் சடங்கு
- பெயர் சூட்டுதல் - குழந்தைக்கு நாமகரணம் செய்தல்
- நிஷ்கிரமானம் - குழந்தையை முதன்முதலாக வெளியுலகிற்கு அழைத்துச் செல்லுதல்
- அன்னப்பிரசன்னம் - குழந்தைக்கு முதன்முதலாக சாதம் ஊட்டுதல்
- முடி காணிக்கை - குழந்தைக்கு முதல் மொட்டை போடுதல்
- காதணி விழா - குழந்தைக்கு முதன்முதலாக காது குத்துதல்
- வித்தியாரம்பம் - குழந்தையை நெல் மணி தட்டில் ஓம் என எழுத வைத்தல்.
- உபநயனம் - குழந்தைக்கு முப்புரி நூல் அணிவித்தல்
- வேதாரம்பம் - குருவிடம் வேதங்கள் அல்லது போர்க் கலையை கற்க அனுப்புதல்
- மீசை மழித்தல் - இளைஞர்களின் மீசை & தாடியை மழிக்கும் சடங்கு
- கல்வி முடிக்கும் சடங்கு - குருவுக்கு குரு தட்சணை வழங்குதல்
- திருமணம் - ஆண்-பெண்களுக்கு திருமணம் செய்துவைத்தல்
- இறுதிச் சடங்கு - இறப்புச் சடங்கு.

*Sincere thanks to----https://ta.wikipedia.org/s/cf2h/compiled by---R.S.BALAKUMAR.M.A.,*



# கவிதையில் சிறுகதை: தூரிகை

ஜமீல்

ஒகுத்திற்கு பாடசாலை செல்ல வேண்டும் வழமைபோல் அலாரம் வைத்து விட்டு படுக்கைக்கு சென்று

தூங்கி விடுகிறேன்

நான் எழும்பும் வரைக்கும்

என் தலைமாட்டில்

கண்கள் சிவக்க முழித்திருந்தது

மேசைக் கடிகாரம்

அலாரம் அடிப்பதற்கு முன்

நாவ மரத்தில் தங்கியிருந்த கொண்டை பெருத்த

பழுப்பு வர்ணச் சேவல்

செட்டையடித்து உரக்கச் சப்தமிட்டுக் கூவி ஆழ்ந்து உறங்கிக் கிடந்த இரவை

அரட்டி விடுகிறது

கோதா குறைக்கு நாவப் பழம்

சுவைக்க வந்திருந்த குயிலும் கத்திக் கூச்சலிட்டுக் கூவி

தன் கடமையை நிறைவேற்றிச் சென்றது.நான் திடுக்கிட்டு படுக்கையிலிருந்து எழும்பினேன்

கண் விடுக்காத பூனைக் குட்டிபோல் தூங்கிக் கொண்டிருந்தது இரவு

அலாரம் அடிக்க இன்னும் பத்துப்

பதினைந்த நிமிடங்கள்

மிச்சம் இருக்கிறது

அதற்குள் ஒரு குட்டித் தூக்கம்

போட்டு விட்டு எழும்பலாமென்று

என்னை கம்பளிப் போர்வைக்குள்

புதைத்து விடுகிறேன்

மௌத்தான உம்மாவைப் போல் ஓயாது கத்தி என்னை எழுப்பிக் கொண்டிருந்தது அலாரம்

காது கன்னம் கிழியும்

அதன் கத்தலை

வாங்கிக் கொள்ளாமல் அசந்து

கொறட்ட விட்டு தூங்கிக் கொண்டிருந்தேன்

ஒரு கட்டத்தில் அலாரமும் உறங்கி விட்டது பின்னர்

வளர்ப்பு பூனை என் அருகில் வந்து கத்தும் சப்தம் கேட்டு எழும்புகிறேன்

ஒகுத்து ஏழை தாண்டி விட்டது

எனக்கு கையும் ஓடல

காலும் ஓடல ஒரே பதட்டமாக

இருந்தது எதையுமே

மீள மடித்து வைக்க இப்போது அவாசங்கள் எதுவுமில்லை

உடன் மகனின் அறைக்குச்

சென்று கண்களை மேய விடுகிறேன்

மகன் பஜருக்கு எழுந்து தொழுதும் பள்ளிக்குச் செல்வதற்கான எந்த

ஆயத்தங்களையும் செய்யாமல்

விட்டத்தை பார்த்தபடி இருந்தான்

என்ன மகன் பள்ளிக்குப் போக இன்னும் நீங்க ரெடியாகலயா

சொணங்காம றெடியாகுங்க

நானும் ரெடியாகி வாறன்

என்று சொல்லி விட்டு காலில்

டயர் பூட்டிய இயந்திரம் போல்

இயங்கி ரெடியாகி முடிந்து

மகனை உடன் அழைத்துச் செல்ல வந்து பார்க்கிறேன் காலைக் கடன்கள் எதுவும் செய்யாது எதையோ பறி கொடுத்ததுபோல் அப்படியே

அமைதியாக இருந்தார்

மகனின் செயற்பாடு எனக்கு

கவலையையும் கோபத்தையும்

உண்டு பண்ணியது.இருந்தும்

அதனை சுதாகரித்துக் கொண்டு

இதப் பாருங்க மகன் நீங்க என்ர வகுத்தில எட்டு மாசப் பிள்ளையா இருக்கக்கையில

கொஞ்சம் கூட ஈவு இரக்கமில்லாம உங்க வாப்பா என்ன கை கழுவிச் சென்றார்

அதன் பின்னர் இந்தப் பொல்லாத சமூகத்தின் ஏழனப்

பார்வைகளையும் அவதூறுகளையும் விமர்சனங்களையும் சகித்துக் கொண்டு.இத்தவரைக்கும் தன்னந் தனியாகப் நின்று

போராடி உங்கள வளர்த்து

வாறன்

அதுவும் இந்த டீச்சர் தொழில்

இல்லையென்றா என்ற நம்மட கெதி அதே கெதிதான்

நான் ஒங்கள

வச்சிக்கிட்டு என்ன பாடு பட்டிருப்பனோ எல்லாத்திற்கும்

படச்ச றப்புக்குத்தான் சுக்றன்

சொல்லனும்

இப்ப நீங்க சின்னப் பிள்ள இல்ல

மகன் எடுத்ததுக்கெல்லாம் அடம் பிடிக்க நீங்க ஓயெல் எழுதப் போறிங்க அடுத்தடுத்த இரண்டு வருடமும் ஏயெல் படித்து சோதன

எழுதி கெம்பஸ் போகணும் அதற்காக இப்போதிருந்தே

கடுமையா படிக்கணும் மகன்

அது மட்டுமில்லாம

எனது கனவு நம்பிக்கை லட்சியம்

எல்லாமே நீங்கதான் மகன்

இப்ப நீங்களும் எனது கனவை

கலைக்க மாதிரி நடந்தா நான் எங்கே போய் முட்டுவது

என்று நைந்த குரலில்

என்னை மீறி உணர்ச்சி வசப்பட்டு பேசினேன்

இதெல்லாம் இப்ப கதைக்க கூடிய நேரமில்ல மகன் ஏற்கனவே நல்லாச் சொணங்கிற்று எப்படியும் சிவப்புக் கோட்டுக்கு முந்தி பள்ளிக்குப் போய்ச் சேர முடியாது எட்டு மணிக்குள்ளாவது போய்ச் சேர வேண்டும் அதையும் பிந்தினா

அரை நாள் லீவாகி விடும்

அதிலும் புதிசா வந்த அதிபர் கண்டிப்பான கடுகடுப்பான ஆழ்

நேற்றும் ஒரு டீச்சறுக்கு பாஞ்சி

வைச்சார் என்றேன்

எதையுமே அலட்டிக் கொள்ளாது

பொடு போக்காக இருந்தார்

எனது பேச்சும் ஒப்பாரியும் அவருக்கு செவிடன் காதில் ஊதிய சங்குபோல் இருந்தது

மழையில நலஞ்சு விளையாடித் திரிந்ததால் தடுமல் காச்சல் பிடித்து போன வாரம் முழுக்க பள்ளிக்குப் போகாம இருந்து நேற்றுத்தானே சென்றார் அதற்குள்ள திரும்பவும் லீவா என்று எனக்குள்ளே கேட்டுக் கொண்டு எதற்கும் மறுகா வந்து

விசாரிக்கிறேன் என்று சொல்லி

என்னை ஆற்றுப்படுத்திக் கொண்டு அவசரவசரமாக பள்ளி

நோக்கி பறக்கிறேன் ஆனால் என்னால் சிவப்புக் கோட்டை முந்தவே முடியவில்லை

கிளாஸ் ரீச்சர் என்பதனால் எனக்கு முதல் பாடம் மன உளச்சுலுடன் வகுப்புக்கு செல்கிறேன் பிள்ளைகளின்

குளப்படிகளும் வகுப்பு கூட்டாமல் குப்பையாக கிடந்ததையும் பார்த்து அவர்கள்

மீது கோபமும் எரிச்சலும் ஏற்பட்டது.இருந்தும் ஒருவாறு ஆசுவாசப்படுத்திக் கொண்டு

அவர்களை வகுப்பை சுத்தம் செய்யச் சொல்லி விட்டு மகனுக்கு கோள் எடுக்கிறேன்

அவர் போணை தூக்கவில்லை அதனால் கற்பித்தலில் சரியாக கவனம் செலுத்த முடியவில்லை மகன்தான் கண் முன் வந்து வந்து செல்கிறான்

எழுந்து காலைக் கடன்களை

செய்து முடித்து விட்டு

தயாரித்து வைத்து விட்டு வந்த

சாப்பாட்டை சாப்பிட்டாரா

இரவும் என்ற பிள்ள

சாப்பிடவில்லையே தனிமையான சூழலில் இன்னேரம் என்ன செய்கிறாறோ

தெரியவில்லை

எனது மனம் கிடந்து பயமும் பீதியும் கொள்கிறது என்ன செய்யலாம் இப்போதுள்ள

பிள்ளைகள் பெற்றோர்களின்

மனதை புரிந்து கொள்வதில்லை

அவர்களுக்கு படைத்த இறைவன்தான் நல்ல புத்தியையும் ஹிதாயத்தையும்

கொடுக்க வேண்டுமென்று

அண்டவனை பிரார்த்தனை செய்து பெருமூச்சு விடுகிறேன்

ஒருவாறு பாதிப் பொழுதை கடத்தி விட்டேன் எப்படியாவது

அரை நாள் லீவு எடுத்து

முதல்ல மகன்ற

பிரச்சினையப் பார்க்கனும் அதிபரிடம் சென்று கேட்டால் அவரது உபதேசமும் ஆயரத்தெட்டு கேழ்விகளும்

சகிக்க முடியாமல் இருக்கும்

என்ன செயவதென்று புரியாத

நிலையில் உதிவி அதிபரிடம்

புரியும் படியாக விழக்கத்தைச்

சொல்லி விட்டு லீவு எடுத்துக்

கொண்டு அவசரமாக வீட்டுக்கு செல்கிறேன்

சாலையில் என்னை கடந்து

செல்லும் யாரையும் பார்த்து

புன்னகை செய்யவோ

நின்று நாலைந்து வாரத்தைகள்

பகிர்ந்து நலம் விசாரிக்கவோ

அவகாசம் இல்லை எனது முந்தானை விலகியது

கூடத் தெரியாமல்

மிக வேகமாக வீடு சென்று

சற்றும் தாமதியாது நேரடியாக மகனின் அறைக்குச் சென்று பார்க்கிறேன்

மகன் பூனைக்கு கூட சாப்பாடு

வைக்காது அவரும் வைத்த சாப்பாட்டை திறந்தும் பார்க்காது காலையில் இருந்த அதே இருக்கையில் அப்படியே இருந்தான்  பூனை மகனை சுற்றி

தன் குரலில் பசிக்கிறதென்று

சொல்லிக் கொண்டிருந்தது

அவரை அணுகி என்ன மகன்

ஒங்கட பிரச்சின சொல்லுங்க

என்றேன் அதற்கு அவர் எதுவுமே

பேசாது மௌனம் சாதித்தார்

ஆனால் அவரது முகம் ஏதோ ஒரு

பாரிய பிரச்சினை இருப்பதை

எனக்கு காட்டிக் கொடுத்தது

பிரச்சினைய சொன்னாத்தான்

மகன் தீர்த்து வைக்கலாம் இப்ப

ஒங்களால அரை நாள் லீவு வேற

எடுத்து வந்திருக்கன் எனக்கு

உங்கள விட்டா வேறு யாரு மகன்

இருக்காங்க ஆறுதல் சொல்ல

இப்ப நீங்களே இப்படி இருந்தா

நான் எங்க போய் முறையிடுவது மகன் ஒங்கட. பிரச்சின எதுவாக இருந்தாலும் உம்மாக்கிட்ட தயங்காம சொல்லுங்க.என்று துருவித்  துருவி கேட்டேன்

அதற்கு அவர் அடக்கி வைத்திருந்த துயரத்த கட்டுப்படுத்த முடியாம அழுதே விட்டார்

ஏன் அழுறிங்க என்ற வாப்பா

நேற்று பள்ளிக்க என்ன நடந்தது

நீங்க நல்லாத்தானே பள்ளிக்குப்

போனிங்க அங்கு வகுப்பில

ஏதாவது பிரச்சினைகள் நடந்ததா

பிள்ளையள் உங்கள ஏசி

அடிச்சத மகன் என்று கேட்டேன்

அதற்கு அவர் அடிச்சா பறுவா இல்ல உம்மா ஆனா புதுசா வந்த அந்த டீச்சர் என் மனச உடைக்க மாதிரி கடுமையா ஏசிப்போட்டா

என்று புலம்பினார்

என்ன நடந்தது மகன் விழக்கமா
சொல்லுங்க என்று திரும்பிக்
திரும்பிக் கேட்டேன்
அதற்கு அவர் காய்ச்சல் சவுப்பில
லேசா சாஞ்சி மேசல தல வைத்து
என்ன அறியாம படுத்திற்றன்

உம்மா அதற்கு வகுப்புக்க ஆங்கிலப் பாடத்திற்கு புதிசா வந்திருக்கும் டீச்சர் என்னடா படுக்க ராவு வெறியடிச்சது இன்னுமாடா தெளியல

என்று கேட்டா
எனக்கு வெட்கமா போச்சி
நான் அப்படியே கூனிக் குறுகி
போய் விட்டேன் பள்ளி உடும் வரை பிள்ளையல்
என்ன வெறியன் என்று பட்டம்
வச்சி கூப்பிட்டாங்க உம்மா
அந்த கவலையிலதான் நான்
பள்ளிக்குப் போகல என்றார்

மகனின் முறைப்பாட்டக் கேட்டதும் எனக்கு கடும் கோபமா வந்தது இருந்தும் என்ன ஆசுவாசப்படுத்திக் கொண்டு

நாளைக்கு பள்ளிக்க நடந்த
சம்பவத்தை அதிபரிடம் முறையிட வேண்டும் என்றேன்
அதற்கு மகன் விடுங்க உம்மா
அந்த டீச்சர் கடும் ஆளாம்
என்று என்ற கூட்டாளி சொன்னான் எனக்கும் அவவ
பார்த்தா கடும் பயமாத் இருக்கு என்றார்

ஆனாலும் எனது பெற்ற மனம் ஆறவில்லை மகனிடம் சொல்லாமல் அதிபருக்கு அழைப்பு எடுத்து நடந்த சம்பவத்தை விழக்கமாக சொன்னேன் உடன் சம்மந்தப்பட்ட டீச்சரை காரியலயம் அழைத்து விசாரித்த பின்னர் கடுமையாக

அவரை கண்டித்தார்

ஒரு வாரம் கடந்த பின்னர்

பள்ளி கலைந்து

மகன் வீட்டுக்கு வந்து மறுபடியும்

நான் பள்ளிக்கு போக மாட்டேன் என்று சொல்லி விட்டு

புத்தகப் பையை மூலையில்

எறிந்து விட்டு அவரது அறைக்குச் சென்று கட்டிலில்

முகம் குப்புற படுத்து விட்டார்

நான் பள்ளி விட்டு வந்த கையோடு உடுப்பக் கூடக் களட்டாமா அவரது அறைக்குச் ஓடோடிச் சென்று

என்ன நடந்த மகன் ஏன் இப்படி
மறுபடியும் பொணக்கெடுக்கயள்
உங்கட பிரச்சினைய
அதிபரிடம் சொல்லி அவரும்
அந்த டீச்சற கூப்பிட்டு
இனி வகுப்பில மாணவர்களிடம்
இப்படி நடந்து கொள்ளக் கூடாதென்று கண்டித்ததாக
என்னிடம் சொன்னாரே என்றேன்

ஆனா நீங்க அதிபரிடம் சம்வத்தை சொன்ன

பிறகுதான் எனக்கு பிரச்சினை பெருக்கெடுத்து அந்த டீச்சர்

என்ன செயல்களாலும் வேறு வேறு வடிவங்களாலும் ஒவ்வொரு நாளும் மிகக் கடுமையாக தண்டித்தா என்றார்

நான் எழுதி முடிந்து கொப்பியக் காட்டினா விரித்துப் பார்க்காமலே எல்லாம் பிழையாக இருக்கு போய் திரும்பி சரியாக எழுதிக்

கொண்டு வா என்பா ஏன் டீச்சர்

நான் சரியாகத்தான் எழுதி இருக்கேன் என்று சொன்னா அதற்கு அவ வாய்க்கு வாய் கதக்கிறாய் எலவ

நீயா டீச்சர் நானா என்று கேட்டு

கெட்ட வாரத்தையால ஏசினா கொப்பிய தூக்கி என் முகத்தில எறிஞ்சா பிறகு வெளியில்

போவென்று வெரசினா சக மாணவர்களை கொண்டு

என்ன பழிக்கச் சொன்னா

இறுதியா வெளியே செல்ல
நான் மறுத்து விட்டேன் அதற்கு
வகுப்பு முனீற்றறின் கையால
தலையில குட்டு வாங்க வச்சா
எனக்கு கடுமையா தல நோகுதும்மா ஏன்மா நீங்க
அதிபருக்கிட்ட சொன்னிங்க
என்று சொல்லி உடைஞ்சி போனான் மகன்

இன்னும் என்ற கூட்டாளிகளின்
உம்மாமார்களுக்கு கோள் எடுத்து ஒங்கட பிள்ளையல
இவன் அஸிமுடன் சேர விடாதிங்க அவனுக்கு எல்லாக்
கெட்ட பழக்கங்களும் இருக்கு
என்று என் காது கேட்கவே
சொல்லுறா உம்மா என்று
ஒரு சிறுவனைப் போல
தேம்பித் தேம்பி அழுதான்
என்ற பிள்ள

அவர் சொன்ன சம்பவங்கள
கேட்டு நான் நிலை குலைந்து
போனேன் எனக்கு சாப்பாடு
இறங்கவே இல்ல இவ்வளவு
கொடு சூரியா அந்த டீச்சர்
எனக்கு அந்த டீச்சற கூப்பிட்டு
நாக்கப் பிடுங்கி சாகிற மாதிரி
வசதியா நாலு வார்த்தை
நறுக்கென்று கொடுக்கணும் போல் தோன்றியது

இருந்தும் அவ செய்த தவற
நாமும் ஒரு டீச்சறாக இருந்து

செய்யக் கூடாதென்று கருதி சுதாகரித்துக் கொண்டு மகனை ஆற்படுத்த முடியாமல் எனது பிரச்சினைகளை யாரிடம் முறையிடுவதென்று கண் கலங்கி அநாதரவாக நின்றேன்

என்னை இப்படி இடை நடுவில்

தவிக்க விட்டுப்போன

மகனின் தந்தையை வழமைபோல் நொந்து கொள்வதை தவிர வேறென்ன

என்னால் செய்ய முடியும்

என்று எனக்குள்ளே புலம்பிக் கொண்டேன்

விண் மீன்கள் பூத்துக் கிடந்த வானமும் திடிரென என்னோடு சேர்ந்து அழத் துவங்கியது எதனையும் ரசிக்க தெம்பற்றவளாய்

போர்வையை எடுத்துக் கொண்டு படுக்கைக்கு சென்று

விட்டேன் நேரமாகியும் மகனின்

அறையில் முளித்துக் கொண்டிருந்தது எடிசனின் ஒளி

அதிகாலை சூரியன் சோம்பல்
முறித்து எழுந்து பூற்களின்
தலைகளில் மலர்ந்திருந்த
பனிப் பூக்களை
தனது ஒளிச் சரடுகளால்
துவட்டி விடுகிறது

கூடுகளுக்கு திரும்பி வருவோமென்பது கூடத்

தெரியாமல் இரை தேடி கிளம்புகின்றன பறவைகள்

நானும் அலாரம் ஒலி கேட்டு
வழமை போன்று காலைக்
கடமைகளை முடித்து விட்டு
பாடசாலை சென்று
முதல் பாடம் முடிந்ததும்

அதிபர் காரியாலயம் சென்று மகனுக்கு நிகழ்ந்த அநீதியை பழி வாங்கலைச் சொல்லி விட்டு

இதற்குப் பிறகு இந்த பாடசாலையில் படிக்க எனது

மகன் விரும்பினாலும் நான்

விரும்ப மாட்டேன் என்று சொல்லி அவரது லீவின் செற்பிக்கட்டை தாருங்கள்

என்று விடாப் பிடியாக இருந்தேன்

ஆனால் அதிபர் தர மறுத்து விட்டு நான் டீச்சறை விசாரித்து

விட்டு அவக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கன் என்று என்னை சமாளித்தார் ஆனால் நான்

அவரது இணக்கப்பாட்டுக்கு
ஒத்துப் போகாது எனது விடயத்தில் உறுதியாக
மிக உறுதியாக இருந்தேன்

ஆசிரியர் என்பவர்கள் மாணவர்களுக்கு எப்போதும்
ஒரு றோள் மொடலாக முன் மாதிரியாக திகழ்பவார்கள்
சமூகத்திற்கும் தேசத்திற்கும்
நற் பிரசைகளை உற்பத்தி செய்பவர்கள் வகுப்பறையில்
மாணவர்களை கனவு காணத்
தூண்டுபவர்கள்

இந்த உலகில் ஒருவரின்
உயர்ச்சியை கண்டு

பொறாமை கொள்ளது அவர் என்னிடம் படித்த மாணவர் என்று சந்தோசம் அடையும் ஒரேயோரு நபர் என்றால் அது ஆசிரியராகத்தான்

இருக்க முடியும் என்று

அதிபரிடம் சிலாகித்துப் பேசினேன்

ஆனால் இந்த டீச்சர் என்ன மாதிரி ஆளென்று எனக்குப் புரியவில்லை எனது

மகனின் மனதை கடுமையாக

புண்படுத்தி உள்ளார் எனது சாபம் அவவ சும்மா விடாது

என்று அதிபரிடம் எனது துயரை

கொட்டித் தீர்த்தேன்

எனது மகன் ஒரு அமைதியான
எவர் வம்பு தும்புக்கும் போகாத
கெட்டிக்காற மாணவன்
இதெல்லாம் தெரியாம புரியாம
வீட்டில் உள்ள பிரச்சினைய
இஞ்ச வகுப்புக்க பிள்ளையளுக்கிட்ட காட்டி
தனது மனச ஆற்றுறாவாக்கும்
என்று நினைக்கத் தூண்டியது
எனது புண் பட்ட மனம்

ஆசிரியனின் உள்ளத்தில் மாணவர்கள் இருக்க வேண்டுமென்று எதிர் பார்ப்பது

போல் மாணவர்களும் தங்களது

உள்ளத்தில் ஆசிரயர்களும் இருக்க வேண்டுமென்று நிச்சயமாக எதிர்பார்ப்பார்கள்

என்று சொல்லி விட்டு மகனின்

லீவிங் செற்றுபிக்ட்ட எழுதி வையுங்க சேர் இல்லாட்டி

அந்த டீச்சறுக்கு எதிராக

மனித உரிமைகள் ஆணையகத்தில் வழக்கு தொடுக்க நேரிடும் என்று சொல்லி விட்டு அடுத்த பாடத்திற்குச் செல்கிறேன்

உடனடியாக எந்த முடிவும்
எடுக்கத் தெரியாத குழப்பத்தில்
இருந்தார் அதிபர் வெளியில்
பீயோனின் பெல் சத்தம் கேட்டது

அங்கிருந்த டீயோ எழுந்து சென்று கடிதத்தை வாங்கிச் சென்று அதிபரிடம் கொடுத்தாள்

இதற்கு முன்னர் இருந்து வந்த பாடசாலையில் நடந்த சம்பவம்

ஒன்றுக்காக பாதிக்கப்பட்ட

பெற்றோர் ஒருவரால் குறித்த டீச்சறுக்கு எதிராக மனித

உரிமைகள் அணையகத்தில்

வைக்கப்பட்ட வழக்கிற்கு வரும்படி அழைப்பு வந்திருந்தது

நான் பாடசாலை கலைந்து வீடு

சென்று மகனின் அறைக்குச்

சென்று அவரை ஆற்றுப்படுத்தி

விட்டு அமர்கிறேன்

அவரது மேசையில் கிடந்த

கொப்பியை திறப்பதும் மூடுவதுமாக இருந்தது ஜன்னலூடக திருட்டுப் பூனையென வந்த காற்று

உடன் காற்று விரித்த பக்கத்தை

வாசித்துப் பார்க்கிறேன்

நடக்கப் போகும்

ஆசிரயர் தினத்திற்கு அவர் தூரிகை எனும் தலைப்பில்

இப்படி ஒரு கவிதை எழுதி வைத்திருந்தார்

**தூரிகை**

ஆசிரியமெனும்
சொல் தவிர்ந்திங்கு
புனிதமிகு சொல்
வேறேதும் ஊண்டோ காண்

பிரபஞ்சமதை புரட்டிப் போடும்
சக்திமிகு நெம்பு கோல்
ஆசிரியமல்லவா

ஒரு பாடலில்
அவனை எழுதித் தீர்த்தல்
சாத்தியமா என்ன

ஒரு இசையில்
அவனை மீட்டுதல்
எங்கணம் தகுமடா

கோடுகளில் அச்சொட்டாக
அவனை வரைந்து தீர்க்க
ஓவியன் யாருமுண்டோ

ஆசிரியம் வடிதெடுக்க
இன்னுமிங்கு சிற்பிகள்
பிறக்கவில்லை பார்

வகுப்பறைகளின்
அடர் இருளை
சுடரேந்தி வாசிக்கும்
மின்மினி அவன்

ஆசிரியமென்பது அறப் பணி
அது அற்பணிப்புகளால்
எப்போதுமே சடைத்திருக்கும்

ஆசிரியனின் வெற்றிடத்தை
இன்னுமொரு ஆசிரியன் தவிர
வேறெதனைக் கொண்டும்
நிரப்பிட முடியாது

உனது சிறகுகள்
உனது ஆகாயம்
உனது கனவுகளென
இங்கு எல்லாமே ஆசிரியம்தான்

உனது புலரியின் பரிதியும்
உனது கருக்கலின்
அம்புலியும் அவனேதான்

உனக்கென வரைந்து தீர்க்கும்
தன் நம்பிக்கையின்
சிறகுகளை விட
நீ அற்புதமென
நம்பித் தொலையும்
எல்லாமே மாயைதான்

ஆசிரியம் கரங்களில் தவழும் பிரம்பின் நுனியில் மலர்கிறது
உனக்கென விதியாக்கப்பட்ட ஒளி மீந்த கனவு



சே கார்கவி கார்த்திக்

# நகர்வின் வலி

நான் நகர்த்திவிட்ட நேரத்திற்கு
தழைகீழி கால்களிரண்டு
கண்கள் மூன்று
இருள் மட்டும் ஏன்
ஒன்று

வேண்டாமென தீர்மானித்த
அவைகளோ
எவைகளோ
சுல்லென பட்டிடும்
உச்சிமேல் வெயிலென
கொஞ்சம் சிரம் தளர்த்தி
உச்சியை தொடத்தான் செய்கின்றன

யாரெல்லாம் சொல்கிறீர்கள்
அந்த வட்டத்திற்குள் சிக்கிய
இரண்டு முட்களுக்கும்
மூன்றாவது முள்ளின் நகர்வு
எத்தனை அவசியமென...

சிறை காத்திருக்கும்
ஆந்தையின் கண்களுக்கு
இருள் பகலாகவும்
பகல் இருளாகவும் தெரிவது ஒன்றும்
தவறாகி விடுவதில்லை
யதார்த்தமான அழைக்கப்பட்ட
அழைப்பின் பின்
அப்பா அழைக்கிறாரென குரலிடும்
மழலையின் குரலில் இல்லாமையின்
வலி....

❍

இரா.வெங்கடேஸ் குமார்

# நரை கூறும் காதல்

திசை அறியா உயிர்கள் மாற்றம் தொட்ட முதல் தருணம்
அலை கொண்ட கரையில் நிரம்பிடும் நுரைகள் போல்
ஆசை பூத்த மனதில் கலை முதல் காவியம் வரை நடத்திய ஈர்ப்புகள்
விரைந்து ஓடிடும் விடலை பருவம் தொடக்கம் முதல்
இமை காணாத ஈர்ப்பில் மதி மயங்கிடும் நிகழ்வுகள்
நிதம் நடந்தும் நகர்த்தி வைத்திட முடியாத பொழுதுகள்
காகிதம் முழுக்க கவிதைகள் தொடும்
தென்றல் மொத்தம் வண்ணங்கள் நிரைந்திடும்
இயல்பான நிகழ்வுகள் எல்லாம் விழா கோலங்கள்
ஓவியங்கள் எல்லாம் பேசிடும் அழகான மொழியில்
வாழ் முழுதில் கண்ட மாய வயது விடலை பாதியில்
ஈர்ப்பில் நிறைந்த காதல் நேரம் செல்கையில்
நிறைந்திடும் மாயைகைகள் மனதை நிரப்பும்
விடலை முடிவில் மொத்தம் நரை கூடிடும்
காதலும் மனம் தொடுவது ஈர்ப்பின் நிகழ்வால் என தெளியும்
நிற்க தடுமாறிடும் நேரம் நிலையில் காதல் துணை நின்றால்
ஈர்ப்புகள் எல்லாம் பருவத்தோடு புகைப்போல் பறக்க
நரை நிறைந்தும் காதல் துளி மாறாமல் கவி படைக்கும்
காகிதத்தில் வரைந்த ஓவியம் நரை பொழுதும் நடமாடிடும்
நித்தம் ஈர்ப்புகள் நிரைத்திடும் மனதின் ஆழத்தை
காதல் முழுதாய் உயிர் காற்றாய் நிலைத்திடும்
ஈர்ப்பின் நரை மாறி காதல் இளமையாய் நடந்திடும்.

❍



## இளையவன் சிவா

மகளின் விளையாட்டில்
சிப்பாயாக எனை
இழுத்து விடுகிறாள்
விதிமுறைகள் அறியாது
விளையாடித் தோற்கிறேன்
கூண்டில் அடைத்தபடி
கதை சொல்லி
விடுதலை பெருகவென்கிறாள்.
புறமுதுகிட்ட மன்னனைப் பற்றி ஆரம்பிக்கையில்
சிப்பாய்க்கும் தகுதியற்றவன்
நீ என விடுவிக்கிறாள்
அப்பா எனும் பிம்பம் அழியும் முன் அன்பினால்
அவளிடம்
சரண் அடைகிறேன்.

❍


## ச. இராஜ்குமார், திருப்பத்தூர் மாவட்டம்

பேருந்தில் பாதி வழியில் ஏறி இறங்கிய
குழந்தையின் சிரிப்பு
பேருந்துவிட்டு இறங்கி வீடு வந்த பின்பும்
கவிதையில்
அமர்ந்துக் கொண்டது சிரிப்பு ...

❍

*Dr* ஜலீலா முஸம்மில், ஏறாவூர், இலங்கை

# எச்சிலூற்றும் நினைவுகள்..



வாழைப்பழக் கரையலும்
பால்வணமும்
பனாட்டு லொலிபாப்பும்
நினைவுதோறும்
எச்சிலூற்றும்

பள்ளித்தோழிகளுடன்
பிரப்பம்பழம் ஆய்ந்ததும்
முள் கிழித்து அழுததும்
பகிர்ந்துண்டதும்
அப்பரவசம்
இப்போதில்லையெனும் அழுத்தம் நெஞ்சம்
கிளர்த்தும்

கோழிக்கூட்டுக்குள்ளும்
தோட்டக் காட்டுக்குள்ளும்
தூத்தி
ஒளிந்து ஒளிந்து
உசுப்பேற்றி ஓடியது
மனக்கண்களில் நிழலாடி விளையாடும்

பப்பாசி உதறுகாய்த் துவையலோடு
மாசியும் வெங்காயமும்
சேர்த்து சுவைத்து
பாட்டுக்கு பாட்டு
போட்டியில் பாடி ஜெயித்தது
பால்வீதியில் நட்சத்திரங்களாய்
நினைவுகள் தோறும் கண் சிமிட்டும்

பொண்ணாப்பிள்ளைக் (பெண் மாப்பிள்ளை)
கலியாணம்
குறுநெல் சோறு முருங்கஞ்சுண்டல் விருந்துடனே
கல்யாணப்பெட்டி பரிமாற்றத்தில் தோழிக்கு
சம்பந்தியாகிய ஆனந்தம் இதயத்தில் இதமாக வீசும்

கல்லுக்கொத்தி
கண் பொத்தி "யவடம் யவடம் புளியடி"
சங்கு எறிந்து எட்டு எட்டாய்
காய் வெட்டி
சட்டாப்பி, மாங்கொட்டை ஒத்தி
விளையாடிய நினைவுகளில் குதூகலமான துள்ளல்

ஆற்றங்கரைத் தோணிப்பயணம்
அனுமதியின்றி அம்மாவிடம் அடி வாங்கி அழுத
கணம் குறுஞ்சிரிப்பை இதழோரம் எப்போதும்
கொண்டுவந்து குவிக்கும்

ஞாயிறு பொன்மாலைப்பொழுதும்
மாதமொரு திரைப்படமும்
சாச்சி வீட்டுத் தொலைக்காட்சியில் கச்சான்
வறுவலோடு பெருங்கச்சேரி
நிகழ்த்தும்

வாழையிலைப் பாய்
தென்னோலைக் கிறுக்கி சமைத்தது
பூவரசு இலைச்சீட்டியடித்து
சிக்குபுக்கு ரயில் வண்டி ஓடியது
கத்தாப் பழம்
தட்டி உடைத்து உண்டது
பொன்னி வண்டு போத்தலுக்குள் அடைத்தது
பொங்கி எழும் உவகைதனை எதனாலும் தடுக்க
முடியாது

மட்டை வீடு கட்டியதும்
மண் குழைத்து
சிரட்டை அப்பம் செய்ததும்
செங்கல் அரைத்து
கொள்ளி அடுப்பில் கிரவல்ரொட்டி சுட்டதுவும்
கலவாங்கோடு பணத்துக்கு
கூவி விற்றதுவும்

அப்பப்பா...
எத்தனை எத்தனை
சுவையான பழமரங்கள்
பால்யத்தின் பாதையில்...

இத்தனை இன்பங்களும்
நீங்கள் சுவைத்ததுண்டா
இயந்திர விளையாட்டுகளில்? என்று ஒருதரமாவது
கேட்டு விட வேண்டும்
இக்காலப் பிள்ளைகளிடம்!!

❍


**மீ.யூசுப் ஜாகிர்**


*கருப்பு வெள்ளையாக*
*இருக்கும் மனிதர்களில்*
*தான்*
*யூகிக்க முடியாத*
*எத்தனை எத்தனை*
*நிறங்கள்..?*

*விரைவில் நிறம்*
*மாற்றிகொள்கிறார்கள்.,*
*கருப்பு வெள்ளையை*
*மட்டும் நேசிக்குமிவனுக்கு*
*எப்படி புரியவைப்பது*
*நிறங்கள் மாறக்கூடியதென்று..!!!*

❍




காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
ஆவணி - 2022


கார்த்திகை - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
கவிதைச் சிறப்பிதழ்



மாசி - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
புரட்டாசி : 2024

# முந்தைய இதழ்கள்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
பங்குனி - 2024
மொழிபெயர்ப்புச் சிறப்பிதழ்


காற்றுவெளி
ஆடி - 2024
கலை இலக்கிய இதழ்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
மார்கழி - 2023
சொக்கன் சிறப்பிதழ்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
தை - 2023